# ஈழநாடு

Eelanadu ஈழநாடு








Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 12.08.2025 திங்கட்கிழமை இதழ் : 225 பக்கங்கள் : 12


## சமஷ்டி, நிர்ணய உரிமையை ஆதரிப்போருடன் பேச தயார்!

### தமிழ் பொது வேட்பாளரை எதிர்ப்பதில்லை தமிழரசின் நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா, ஓக. 12

சமஷ்டி, சுய நிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வை ஆதரிக்கும் ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேச்சு நடத்துவதற்கு தயாராக உள்ளதாக நேற்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை எதிர்ப்பதில்லை என்றும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து வேட்பு மனுத் தாக்கலின் பின்னர் அறிக்கை ஒன்றை வெளியிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

11

## சமல், சசீந்திர ரணில் பக்கம்!

### ராஜபக்ஷ குடும்பத்துக்குள் விரிசல்

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பொதுஜன பெரமுன எடுத்துள்ள தீர்மானம் காரணமாக ராஜபக்ஷ குடும்பத்துக்குள் கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளதாக அரசியல்

11

## எதிரணி ஆசனங்களில் நாமல் ஆதரவு எம்.பிக்கள்?

கொழும்பு, ஓக. 12

பொதுஜன பெரமுனவில் எழுந்துள்ள பிளவை தொடர்ந்து நாமல் ராஜபக்ஷ தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்வது குறித்து ஆராய்ந்தனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து நாமல் ராஜபக்ஷ தலைமையிலான குழுவில் உள்ள பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆராய்ந்துள்ளனர்.

எனினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதனை நிராகரித்துள்ளார். பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் வரிசையிலேயே அமர்வார்கள் என அவர் தெரிவித்தார்.

கட்சியைப் பிளவுபடுத்திய பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் எவ்வாறு ஒன்றாக அமர்வது என நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவான பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர் எனவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ)

# தமிழ்ப் பொதுக் கட்டமைப்பை இன்று திடீரென அழைத்த ரணில்

### தெளிவான காரணங்கள் இல்லாது சந்திக்க முடியாதென நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 12

**தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்புடன் சந்திப்பு நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருந்த நிலையில்-அந்த சந்திப்பு திடீரென திகதி மாற்றப்பட்டு இன்று திங்கள்கிழமை காலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

எனினும் குறித்த சந்திப்பு தொடர்பான போதிய விளக்கங்கள் வழங்கப்படாததன் காரணமாக அதில் பங்கேற்க முடியாதெனவும், அது குறித்து மேலதிக விவரங்களை வழங்குமாறும் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் பொதுச் சபையைச் சேர்ந்த பிரதிநிதிகள் 7 பேர்களும், அரசியல்

11

## ரணிலின் அழைப்பை ஏற்றது ஜனநாயக போராளிகள் கட்சி

யாழ்ப்பாணம், ஓக. 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ்க் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளை பேச்சுக்கு அழைத்துள்ள நிலையில் தாம் அதில் பங்கேற்று பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசி தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

11



## பரமன்கிராய் பகுதியில் விபத்து! யாழ்.இளைஞர் பரிதாப மரணம்!!

கிளிநொச்சி, ஓக. 12

கிளிநொச்சி - பூநகரி, பரமன்கிராய் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

11

## ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புக்கு ஐரோப்பிய, பொதுநலவாய பிரதிநிதிகள்

கொழும்பு, ஓக. 12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்காக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன.

11

## எதிர்வரும் 15ஆம் திகதி விசேடமான பாதுகாப்பு

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யும் தினமான எதிர்வரும் 15ஆம் திகதி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய இந்த விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இந்த பாதுகாப்புத் திட்டங்களுக்கு விசேட

11


## ஜனாதிபதி போட்டியிலிருந்து நாமல் விலகினால் மீண்டும் இணைவோம்!

### பகிரங்கமாக கூறும் எஸ்.எம்.சந்திரசேன

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ வேட்பு மனுத்தாக்கல் செய்யாமல் தவறைத் திருத்திக் கொண்டால் மீண்டும் பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைவோம். தன்னிச்சையாக எடுத்த தீர்மானத்தால் கட்சி பிளவடைந்துள்ளது என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதி



யில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில்

11

## ராஜபக்ஷ குடும்பத்துக்குள் பிளவா? பொய்ப் பிரசாரம் என்கிறார் நாமல்!

கொழும்பு, ஓக. 12

ராஜபக்ஷ குடும்பத்துக்குள் குழப்பமான நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாக பொய்யான பிரசாரங்கள் செய்யப்படுவதாக தெரிவித்துள்ள பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ, பிரசாரப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட தும் ராஜபக்ஷக்களின் ஒற்றுமை நிரூபணமாகும் என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டதை அடுத்து ராஜபக்ஷக்களின் குடும்பத்துக்குள் பிரச்னைகள் ஏற்பட்டுள்ளதாக வெளியாகிவரும் தகவல்கள் தொடர்பில் அவரிடம் வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி வேட்பாளராக நான் நிறுத்தப்பட்டமைக்கு

11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது தொடர்பாக பேசப்பட்ட ஆரம்ப நாட்களில், அந்த யோசனை தொடர்பாக இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர்

மறவன்புலவு சச்சிதானந்தம் ஓர் அறிக்கையை வெளியிட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்த அறிக்கை பற்றி இந்தப் பத்தியிலும் பிரஸ்தாபித்திருந்தோம்.

தமிழர்கள் என்றால் பெரும்பாலானவர்கள் சைவர்கள்தான் என்றும் ஒரு சைவரையே இலங்கை முழுவதும் வாழும்

தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்றும் தனது அறிக்கையில் கோரிக்கை

விடுத்த சச்சிதானந்தம் ஐயா, அந்த வேட்பாளராவதற்கு தகுதியானவர் மனோ கணேசன் தான் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அந்த அறிக்கை பற்றி உடனடியாகவே தனது கருத்தை தெரிவித்த மனோ கணேசன், வடக்கு கிழக்கிலுள்ள ஈழத்தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி ஒரு வேட்பாளரை நிறுத்துவது அவர்களின் உரிமை என்றும், ஆனால், அதற்குள் வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களை சம்பந்தப்படுத்த வேண்டாம் என்றும் கோரியிருந்தார்.

அதேவேளை, மிக அண்மைக்காலம் வரை, ஈழத்தமிழர்கள் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது அவர்களின் உரிமை என்றும், ஆனால், தான் யாரை ஆதரிக்கின்றாரோ, அவருக்கு இரண்டாவது விருப்பு வாக்கை கொடுங்கள் என்று கேட்டு பிரசாரம் செய்வேன் என்றும் தொடர்ந்து கூறிவந்தவர் மனோ கணேசன். தாங்கள் சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் கூட்டணியில் இருந்தாலும், ஜனாதிபதி வேட்பாளராக யாரை ஆதரிப்பது என்பதில் முடிவு எடுக்கவில்லை என்றும் தொடர்ச்சியாக கூறிக்கொண்டிருந்த மனோ, இப்போது கடந்த எட்டாம் திகதி ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்கு உழைப்பதற்கு முடிவெடுத்து விட்டார். ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, அப்படி முடிவெடுத்த பின்னர், அவரது பொது வேட்பாளர் பற்றிய கருத்தும் மாறிவிட்டதை காணமுடிகின்றது.

அண்மையில் ஒரு காணொலி பேட்டி ஒன்றில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதி செய்வதற்காகவே தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் சிலர் தீவிரமாக இருந்ததாகவும், அதாவது

ரணில் - மகிந்த இணைந்து தேர்தலைச் சந்தித்தால் தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பதாலேயே சஜித்துக்கு கிடைக்கும் வாக்குகளை அவருக்கு கிடைக்காமல் செய்வதற்காகவே சில அரசியல் கட்சித் தலைவர்கள், பொது வேட்பாளர் விடயத்தில் அதனை ஆதரித்ததாகவும், ஆனால், இப்போது மகிந்த தனித்து போட்டியிடுவதால், ரணிலுக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள் என்று அவர்கள் நம்புவதால் தற்போது பொது வேட்பாளர் விடயத்தில் பின்னடிப்பதாகவும் மனோ கணேசன் தனது கண்டுபிடிப்பை வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்ப் பொது வேட்பாளராக அரியநேந்திரனை அறிமுகம் செய்துவைக்கும் நிகழ்ச்சியில் கட்சித் தலைவர்களை- அதாவது எம். பிக்களை காணவில்லை என்றும், முன்னாள் எம்.பிக்கள் சிலரும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுமே கலந்துகொண்டதாகவும் அவர் தனக்கு சரி என்று பட்டதை அப்படியே சொல்லியிருக்கின்றார்.

அந்த வேட்பாளர் அறிமுக வைபவத்தில் எம். பிக்கள் கலந்துகொள்ளவில்லையே தவிர அவர்களின் கட்சியினர் கலந்துகொண்டிருந்தார்கள். அப்போது பாராளுமன்றத்தில் இருந்த எம். பிக்கள் அந்த வைபவத்தில் கலந்துகொள்ளவில்லை என்பதற்காக அவர் எப்படி அந்த முடிவுக்கு வந்தார் என்பது தெரியவில்லை.

தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம் பேசப்பட்ட காலத்திலிருந்து அதற்கு ஆதரவாக குரல் கொடுத்துவந்த மனோ கணேசன், இந்த விடயத்தில் வடக்கு கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற தமிழர்களை சம்பந்தப்படுத்தாதீர்கள் என்று கோரிக்கை விடுத்ததாலேயோ என்னவோ, தமிழ்ப் பொது வேட்பாளர் வடக்கு கிழக்குடன் நின்றுவிட வேண்டிவந்தது. வடக்கு கிழக்கு தமிழர்களின் பிரச்னைகளுக்கும் அதற்கு வெளியே வாழ்கின்ற தமிழர்களின் பிரச்னைகளுக்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்திருக்கும். ஆனால், இன்று அவ்வாறு தம்மைக் கண்டுகொள்ளவில்லை என்று கூறிக்கொண்டு, அதாவது தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை குறை கூறிக்கொண்டுதான் மலையகத்திலிருந்து ஒரு முன்னாள் எம். பி. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்திருக்கிறார்.

மலையகத்தின் முன்னாள் எம்.பியும், இலக்கிய பிரமுகரும், சமூக சேவையாளருமான மல்லிகைப்பூ சந்தி திலகர், மலையக மக்களின் கோரிக்கைகளை முன்வைத்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்திருக்கிறார்.

மலையகத்தின் முக்கிய அரசியல் அணிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கின்றது. மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி, சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கவிருக்கின்றது. அப்படியெனில் மலையகத் தமிழர்களின் வாக்குகள் இரண்டு வேட்பாளர்களுக்கும் செல்லவிருக்கும் நிலையில் திலகர் யாரை வெல்ல வைப்பதற்காக களமிறங்குகின்றார் என்று சொல்லப்போகின்றார்களோ தெரியவில்லை.!

- ஊர்க்குருவி.

# மாணவனைத் தாக்கிய போக்குவரத்து பொலிஸ்

## மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

கொழும்பு, ஒக. 12

பயாகல பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகளின் குழுவினர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் சென்றமைக்காக 16 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரை கொடூரமாக தாக்கிய சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த மாணவன் கடந்த 7ஆம் திகதி தனது தந்தையின் மோட்டார் சைக்கிளில் அருகில் உள்ள கடையொன்றுக்கு சென்றுள்ளதாகவும், இதன்போது அவரது நண்பர் தலைக்கவசம் அணியாமல் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதனையடுத்து, பயாகல பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் இருவரை துரத்திச் சென்று, மோட்டார் சைக்கிளை நிறுத்தி அவர்களை தாக்கியுள்ளனர்.

அவர்களை துரத்திச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்திருந்த மாணவனின் காதில் தாக்கியதாகவும், மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற பாடசாலை மாணவனை பல தடவை கடுமையாக தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளான பாடசாலை மாணவன் சிகிச்சைக்காக களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பயாகல பொலிஸ் நிலைய பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

(அ)

# எகிப்து வெளியுறவு அமைச்சருடன் அமைச்சர் அலி சப்ரி முக்கிய பேச்சு

கெய்ரோ, ஒக. 12

எகிப்திய தலைநகர் கெய்ரோவில் வெளிவிகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் அந்த நாட்டின் வெளிவிகார அமைச்சர் பத்ர் அப்தெலாட்டி ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த வருடம் கொழும்பில் இடம்பெற்ற வெளியுறவு அமைச்சர்கள் மட்ட இரண்டாவது சுற்று அரசியல் ஆலோசனைக் கூட்டத்தின்போதான இருதரப்பு ஒத்துழைப்பு வழிமுறைகளையும் எகிப்திய வெளிவிவகார அமைச்சர் பத்ர் அப்தெலட்டி இதன்போது பாராட்டியுள்ளார்.

கடந்த வருட இறுதியில் எகிப்து மற்றும் இலங்கை பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை இலங்கை மீண்டும் ஆரம்பித்ததையும் அவர் வரவேற்றுள்ளார்.

இலங்கையின் பிரதான நிறுவனங்களின் ஆயத்த ஆடைத் துறையில் முதலீடுகளைப் பாராட்டிய அவர் இலங்கை முதலீட்டாளர்களை உற்பத்தித் துறையில் அதிக நம்பிக்கைக்குரிய முதலீட்டு வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள அழைப்பு விடுத்துள்ளார்.

அதேநேரம் பொருளாதாரம், கலாசாரம் மற்றும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் எகிப்துடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் இலங்கையின் அர்ப்பணிப்பையும் ஆர்வத்தையும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்தியுள்ளார். (அ)

# ரணில் அணியின் வெற்றிக்கான அதி உச்ச பிரசாரத்தில் பவித்ரா!

கொழும்பு, ஒக. 12

ரணில் விக்கிரமசிங்க அணியில் இணைந்துள்ள அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, ரணில் அணியின் வெற்றிக்கான பணிகளை அதியுயர் மட்டத்தில் ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறச் செய்ய பல புதிய ஆக்கபூர்வமான திட்டங்களை அவர் முன்வைத்துள்ளதாக தெரியவருகிறது.

அதன்படி, பிரசார நடவடிக்கைகளில் இரத்தினபுரி மாவட்டத்தை மையமாக வைத்து முன்மொழிவுகளை அவர் முன்வைத்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக கடந்த 9ஆம்திகதி இடம்பெற்ற வைபவமொன்றில் "ரணில் போன்ற தலைவரை பங்களாதேஷ் தேடுகிறது" என அறிவித்துள்ளார்.

பங்களாதேஷின் இடைக்கால ஆளும் குழுவின் தலைவராக நோபல் பரிசு பெற்ற கலாநிதி முஹம்மது யூனுஸ் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க இன்னும் திறமையானவர் எனவும் பவித்ரா வன்னியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# ரணிலின் வெற்றிக்காக நாடு முழுக்க 150 அரசியல் கூட்டங்களுக்கு ஏற்பாடு

கொழும்பு, ஒக. 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதி செய்வதற்காக நாடு முழுவதும் அரசியல் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதற்கமைய, ஏறக்குறைய 150 அரசியல் கூட்டங்களை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவற்றில் 100 முக்கிய கூட்டங்களாக இருக்கும் என தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மீதமுள்ளவை ஆதரவு குழுக்களால் நடத்தப்படும் எனவும் தெரியவந்துள்ளது.

இந்தக் கூட்டங்களுக்கு ஹரீன் பெர்னாண்டோ, மஹிந்தானந்த அளுத்கமகே, பிரசன்ன ரணதுங்க, வஜிர அபேவர்தன, ரமேஷ் பத்திரன, மனுஷ நாணயக்கார மற்றும் பலர் பிரதான பேச்சாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

# மலையேறியவர் கற்பாறை சரிந்து உயிரிழப்பு!

கொழும்பு, ஒக. 12

அம்புலுவாவ மலைப்பகுதியில் சுற்றுலாப் பயணம் செல்வதற்கு தவறுதலான பாதையினூடாக மலையேறிக்கொண்டிருந்த நபர் மீது கற்பாறை சரிந்து வீழ்ந்ததில், அந்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நான்கு பேர் கொண்ட குழுவினர் மலை ஏறிக்கொண்டிருந்தபோதே, அவர்களில் ஒருவர் கற்பாறை வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் தெஹியோவிட்ட முருத்தெட்டுவே பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் என்றும் அவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை என்றும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டபோது, விபத்துக்குள்ளான நபர் மனைவியிடம் கூறாமல் தனது நான்கு நண்பர்களுடன் சுற்றுலா சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.08.2024 திய்கட்கிழமை
குரோதி வருடம், ஆடி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தெற்குடன் பேசுதல்

தேர்தல் களம் மிகவும் நெருக்கடிமிக்கதாக மாறிவருகின்றது. யாரை - யாரால் தோற்கடிக்க முடியும் - முடியுமா என்னும் கேள்விகளுடன் தினமும் நிலைமைகள் மாற்றமடைகின்றன. ரணில் வியூகங்களின் மீது நம்பிக்கை கொண்டவராக இருக்கின்றார். அவரது வியூகங்கள் அவரை பலமுறை கைவிட்டிருக்கின்ற போதிலும்கூட, அவர் நம்பிக்கையுடன் நகர்கின்றார். மறுபுறம், சஜித் பிரேமதாச தான்தான் வெற்றியாளர் என்னும் நிலைப்பாட்டில் பயணம் செய்கின்றார். அனுரகுமார திஸ்ஸநாயக்க தென்னிலங்கை மக்கள் மத்தியில் மாற்றம் ஏற்படும் என்னும் நம்பிக்கையுடன் இருக்கின்றார். ஆனால் எவர் வெற்றிபெற வேண்டும் என்றாலும் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களின் ஆதரவு கட்டாயமானது.

இந்த பின்புலத்தில் நோக்கினால் பிரதான போட்டியாளராக ரணிலும் சஜித்துமே இருப்பதாக தெரிகின்றது. ஏனெனில், அனுரகுமாரவைப் பொறுத்தவரையில் அவரால் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களின் ஆதரவை பெற்றுக்கொள்ள முடியாது. அந்தளவிற்கு ஏனைய சமூகங்களுடன் அவர் நெருங்கிச் செயல்பட்ட ஒருவரல்ல. எனவே, அனுரவின் வெற்றிவாய்ப்பு மிகவும் குறைவானதாகவே தெரிகின்றது. ஒரு வேளை, 2019இல் ஏற்பட்டது போன்றதோர் எழுச்சி ஏற்பட்டு பெரும்பான்மையான சிங்கள மக்கள் அனுரவின் பக்கம் திரும்பினால் மட்டும்தான், அவ்வாறானதோரு அதிசயம் நிகழக்கூடும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளின் வெற்றிக்கு அவசியமானது - வெற்றியை நிர்ணயம் செய்யக் கூடியது. இவ்வாறானதோரு பின்புலத்தில்தான் தமிழ் பொது வேட்பாளர் தென்னிலங்கையால் உற்று நோக்கப்படுகின்றார். ஆரம்பத்தில் இது தமிழ் மக்களின் உரிமையென்று கூறிய மனோ கணேசன் போன்றவர்கள் கூட, தற்போது தடம்புரள முற்படுகின்றனர். காரணம், தமிழ் பொது வேட்பாளரை நோக்கி, தமிழ் மக்கள் திரும்பி விடுவார்களோ என்னும் அச்சம் மெதுவாக தொற்றிக் கொள்வதாகவே தெரிகின்றது. இந்தப் பின்புலத்தில் தெற்குடன் பேசினால் என்ன என்றவாறான எண்ணப்பாங்கும் தமிழ் தேசியத்தை முன்னிலைப்படுத்தும் கட்சிகள் மத்தியில் அரும்புவதாகவே தெரிகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ் மக்கள் பொதுச் சபையும் தமிழ் தேசிய கட்சிகளும் இணைந்திருக்கும் தமிழ் பொதுக் கட்டமைப்பு தெற்கின் கவனத்தை பெற்றிருக்கின்றது. ஆனால், தெற்குடன் பேசினால் என்ன - என்னும் நிலைப்பாடு தவறானதல்ல. ஆனால், ஒரு தொலைபேசி அழைப்பின் மூலம் தமிழினத்தை கொழும்பின் மேசைக்கு அழைக்கலாம் என்னும் மனோபாவத்திற்கு இடமளிக்கக் கூடாது. அது தமிழினத்தை ஒரு மிகவும் பலவீனமான இனமாகவே காண்பிக்கும்.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான காலப்பகுதியில் பல பேச்சு மேசைகளை தமிழினம் கண்டிருக்கின்றது. ஆனால், பதினைந்து வருடங்கள் எவ்வித முன்னேற்றங்களையும் தராமலேயே கடந்திருக் கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் ஒரு தொலைபேசி அழைப்புப் பேச்சு மூலம் மாற்றங்கள் வந்துவிடப் போவதில்லை. அவ்வாறு வருமென்று எவரேனும் எண்ணினால் - அவ்வாறு எண்ணுபவர்கள், ஒன்றில் அரசியல் கற்றுக்குட்டிகளாக இருக்கின்றனர் அல்லது தங்களின் சுயநல நிகழ்ச்சி நிரல்களுக்கு முன்னுரிமையளிப்பவர்களாக இருக்கின்றனர். ஏனெனில், தெற்குடன் பேசுதல் என்பதற்கு நீண்ட வரலாறுண்டு. இதே வேளை, தெற்குடன் பேசி வெறுங் கையுடன் திரும்பும் தமிழ் தலைவர்கள் என்போரின் கதையும் மிகவும் நீண்டது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் மீண்டும் வெறுங்கையுடன் திரும்புவதற்காக பேச வேண்டியதில்லை. தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்னும் முடிவு இந்தளவு அதிர்வலைகளை ஏற்படுத்துமானால், அந்த வேட்பாளர் பெறும் வாக்குகள் தெற்கின் கொள்கை நிலைப்பாடுகளிலும் நிச்சயம் மாற்றங்களை ஏற்படுத்தும். எனவே, அவ்வாறான மாற்றங்களுக்கான வாய்ப்பை வழங்கும் வகையில் செயல்படுவதே இன்றைக்கு தேவையானது. பேசும் அவசரத்தில், தமிழ் கட்சிகள் அஷ்டாங்க நமஸ்காரத்தில் சங்கமாகிவிடக்கூடாது.

## நல்லூரான் திருவடி - 4

# யாழ்ப்பாண சிவயோக சுவாமிகள்

எச். டபிள்யூ. தம்பையா
(உயர் நீதிமன்ற நீதிபதி).



இலங்கையின் வடபாகத்தில் ஞான ஒளியாக விளங்கியவர் யோகசுவாமிகள். அவர் நல்லூர் கோவில் தேரடியில் செல்லப்பா சுவாமிகளின் சீடராக இருந்தவர். செல்லப்பா சுவாமிகள் ஒரு சிறிய குடிசையில் வாழ்ந்து தமது ஆன்மீக சக்தியை வெளிப்படுத்தினார். தோற்றத்தில் எளியவராக உடம்பில் எப்போதும் தெய்வீக நறுமணம் வீசுகின்ற தன்மையை செல்லப்பா சுவாமிகள் கொண்டிருந்தார். ஆழமான உள்நோக்குடைய வார்த்தைகளை எப்போதும் பேசுவார். தமது உண்மையான சீடராக யோகசுவாமிகளையே செல்லப்பா சுவாமிகள் ஏற்றுக்கொண்டார். செல்லப்பா சுவாமிகளின் மறைவின் பின்னர் அவரது ஆன்மீக பயணத்தை யோகசுவாமிகள் தொடர்ந்தார். அறியாமை, அங்காலாய்ப்பில் சிக்கியோருக்கு குன்றின் மேல் வைத்த ஒரு தீபமாக யோகசுவாமிகள் விளங்கினார்.

பலதரப்பட்ட கொள்கைகள். மதவேறுபாடுகள் கொண்டோருக்கெல்லாம் அவர் ஓர் ஆன்மீக விளக்காக ஒளி தந்தார். ஒரு கிறிஸ்தவனைச் சந்திக்கும்போது விவிலிய வேதத்தை ஆதாரம் காட்டிப் பேசுவார். யேசு பிரானின் ஈடிணையற்ற வாக்கியங்களான “உன்னால் இயலுமான வரை முழுமனத்தோடு இறைவன்மீது அன்பு செலுத்து. உன்னைப்போல் உன் அயலவனையும் நேசி” என்ற வாக்கியங்களை அடிக்கடி யோக சுவாமிகள் கூறுவார்.

ஒரு பௌத்தனுக்கு புத்த பகவான் அருளிய தம்மபத போதனைகளில் இருந்து விளக்கங்களைக் கூறுவார். இஸ்லாமியர்களுக்கு நபிகள் நாயகம் எவ்வாறு இறையன்போடு வாழ்ந்தார் என்று கூறுவார். இந்துக்களுக்கு வேதாந்தம், சைவ சித்தாந்தம் என்பவை பற்றி விளக்கிக் கூறுவார். “எல்லா நதிகளும் ஒரு கடலில் சங்கமிப்பதுபோல எல்லா மதங்களும் ஒரே இலக்கை அடைகின்றன”, என்று யோக சுவாமிகள் கூறுவார். தமது இளமைக் காலத்தில் தனிமையாக வாழ்ந்து வந்தார். ஆழ்ந்த தியானத்தில் எப்போதுமிருப்பார். பணம், பொருள் என்பவற்றில் அவர் பற்றுக்கொண்டதில்லை. தம்மை நாடி வருபவர்கள் கொண்டுவரும் உணவுப் பொருட்களை ஏனையோருக்கும் பகிர்ந்தளிப்பார். அவர் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதில்லை. ஆயினும், தம்மை நாடிவருவோரிடம் இறைவனையடையும் பக்தி மார்க்கத்தை காட்டிநின்றார்.

அவர் இளமைப் பருவத்திலிருந்தபோது ஓர் இஸ்லாமிய மந்திரவாதியைச் சந்தித்தாராம். அந்த மந்திரவாதி செய்து காண்பித்த ஜாலங்களில் ஒன்று யோகசுவாமிகளை கவர்ந்திருந்ததாம். வானத்தில் முகிலே இல்லாத ஒரு தருணத்தில் அந்த மந்திரவாதி சுவாமிகளிடம் மழையைக்காண விருப்பமா? என்று கேட்டாராம். யோகரும் ஆம் என்று கூறவே, அந்த மந்திரவாதி சில மந்திரங்களை உச்சரித்ததும் மழை பொழிய ஆரம்பித்ததாம்.


யோகசுவாமிகள் தமிழில் பாண்டித்தியம் பெற்றவர். சிவதொண்டன் சபையை தொடங்கி வைத்தார். அவரின் நற்சிந்தனைப் பாடல்கள் சிறந்த தத்துவங்களை கொண்டவை மட்டுமல்ல. நல்ல தமிழ் வளத்தையும் கொண்டிருந்தன. இதுதவிர, ஆங்கிலம், தமிழ், சிங்களம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் அவர் சிறந்த ஆளுமையைக் கொண்டிருந்தார். யோக சுவாமிகள் அருகே வரும்போது சந்தன, கற்பூர வாசனைகள் அவரிடமிருந்து வீசுகின்றமையைக் காண முடியும்.

தொண்ணூறு ஆண்டுகள் வரை இப்புவியில் வாழ்ந்து அருளாசி வழங்கியவரே யோக சுவாமிகள். தம்மை நாடி வந்த பக்தர்களிடம் எதனையும் எதிர்பாராது ஆன்மீக பாதையில் அவர்களை போகச்செய்தார். “நீங்கள் மறைந்த பின்னர் எமக்கு யார் வழிகாட்டுவார்கள்?” என்று அவரின் பக்தர் ஒருவர் அவரிடம் கேட்டுள்ளார். அக் கேள்விக்கு யோக சுவாமிகள், “கடவுள் இருக்கின்றார்” என்று பதிலளித்துள்ளார். அவரின் ஆன்மீக ஞானம் எப்போதும் ஓர் ஒளிவிளக்காகவே அருள்பாலித்து நிற்கும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

**தொகுப்பு : அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கடினமான காரியங்களை எளிதாக முடிப்பீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**இடபம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**மிதுனம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வெளி வட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். பழைய சிக்கல்கள் தீரும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். புதுமை படைப்பீர்.

**கடகம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நிகழும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**சிம்மம்**
குடும்பத்தினர்களுடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். ஊழியர்கள் உதவுவார்கள். புது அத்தியாயம் தொடங்கும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. ஈகோ வந்து போகும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்.

**தனுசு**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். சக ஊழியர்கள் முக்கியத்தும் தருவார்கள்.

**மகரம்**
உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புதுஇடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம் வரும். கவனம் தேவைப்படும்

# தொழில் வளர்ச்சியில் தமிழகத்தின் தற்போதய நிலை கவலைக்கிடம்!

## பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை குற்றச்சாட்டு

ஈரோடு, ஓக.12

ஏனைய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தொழில் வளர்ச்சியில் தமிழகம் பின்தங்கியுள்ளது என தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

ஈரோட்டில் கல்லூரி மாணவர்களுக்கான தொழில் முனைவோர் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற அண்ணாமலை செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு,



தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பின்தங்கியுள்ளது. இதற்கு ஜி.எஸ்.டி. குறியீடு வைத்து எந்த மாநிலம் முன்னேற்றம் அடைந்து வருகிறது என்பதை கணிக்க முடியும். தமிழகம் ஜி.எஸ்.டி. மாநில வருவாய் மைனஸ் புள்ளி அடிப்படையில் கீழே சென்றுள்ளது. அந்த வகையில் தமிழகத்தின் பொருளாதாரம் சீர்குலைவை நோக்கிச் சென்றுள்ளது.

தொழில்முனைவோருக்கு போதுமான வசதிகளை தமிழக அரசு ஏற்படுத்தித் தரவேண்டும். தமிழகத்தில் இருந்து தொழில்முனைவோர் வேறு மாநிலத்துக்குச் செல்லாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.

(எ)

# அரசு மருத்துவர் மரணித்தால் அவர் குடும்பம் நடுத்தெருவில்

## இதுதான் சமூக நீதியா?- சீமான் கேள்வி

சென்னை, ஓக.12

கள்ளச் சாராயம் அருந்தி உயிரிழந்தால் 10 இலட்சம் ரூபாய், உயிரைக் காப்பாற்றும் அரசு மருத்துவர் மரணித்தால் அவரது குடும்பத்தை நடுத்தெருவில் நிற்க வைப்பதுதான் தி.மு.க. அரசு கடைப்பிடிக்கும் சமூக நீதியா?- இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதேவேளை, கொரோனா பெருந்தொற்று தடுப்புப் பணியின்போது உயிரிழந்த அரசு மருத்துவரின் குடும்பத்துக்கு அரசுப் பணி வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "உயிர்காக்கும் உயர்ந்த சேவையாற்றும் அரசு மருத்துவர்களின் சம்பள அதிகரிப்பு கோரிக்கைகளைத் தொடர்ந்து புறக்கணித்து, அவர்களைப் போராடும் நிலைக்குத் தள்ளியுள்ள தி.மு.க. அரசு, குறைந்தபட்சம் கொரோனா காலப்பகுதியில் பணியின்போது உயிரிழந்த அரசு மருத்துவர்களின் குடும்பத்துக்கு வாழ்வாதார உதவியைக்கூடச் செய்ய மறுப்பது வன்மையான கண்டனத்துக்குரியது.

மக்கள் உயிர் காக்க தன் உயிரைப் பணயம் வைத்த அரசு மருத்துவரின் குடும்பத்தை ஒரு கருணை வேலைக்காகக் காத்திருக்கச் செய்து அலைகழிப்பது என்பது, மருத்துவர்களின் ஈகத்தையும், அர்ப்பணிப்பையும் கொச்சைப்படுத்தி இழிவுபடுத்துவதாகும்.

தி.மு.க. அரசின் இந்தத் துரோகச் செயல், இனிவரும் இளந்தலைமுறை மருத்துவர்களிடத்தில் சேவைபுரிய வேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிடும் கொடுஞ்சூழலை ஏற்படுத்திவிடும். ஆகவே, கொரோனோ பெருந்தொற்று பணியின் போது உயிரிழந்த அரசு மருத்துவரின் குடும்பத்துக்கு அரசுப்பணி வழங்க வேண்டுமென்று தமிழக அரசினை நாம் தமிழர் கட்சி சார்பில் வலியுறுத்துகிறேன் என்று சீமான் கூறியுள்ளார்.

(எ)

# நீதி கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 1,500 பேர் மீது பொலிஸார் வழக்கு

சென்னை, ஓக. 12

வள்ளுவர் கோட்டத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆம்ஸ்ட்ராங்கின் மனைவி உட்பட 1,500 பேர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

பகுஜன் சமாஜ் கட்சியின் முன்னாள் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங், கடந்த மாதம் 5ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். இது தொடர்பான வழக்கில் இதுவரை 22 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நிலையில், ஆம்ஸ்ட்ராங் கொலைக்கு நீதி கேட்டு சென்னை வள்ளுவர் கோட்டத்தில் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆனந்தன் தலைமையில் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் பொற்கொடி ஆம்ஸ்ட்ராங் உட்பட



ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, அனுமதியின்றி ஆர்ப்பாட்டம் நடத்தியதாக பகுஜன் சமாஜ் கட்சி மாநிலத் தலைவர் ஆனந்தன், கட்சியின் ஒருங்கிணைப்பாளரும் படுகொலை செய்யப்பட்ட ஆம்ஸ்ட்ராங்கின் மனைவியுமான பொற்கொடி, தேசிய ஒருங்கிணைப்பாளர் அசோக் சித்தார்த், திரைப்பட இயக்குநர் பா.ரஞ்சித், சமத்துவப் படை நிறுவனர் சிவகாமி உட்பட 1,500 பேர் மீது 2 பிரிவுகளின் கீழ் நுங்கம்பாக்கம் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

(எ)

# கள்ளச் சாராய விவகாரம் ॥ பேருக்கு அழைப்பாணை

கள்ளக்குறிச்சி,ஓக. 12

கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயம் அருந்தி 60 பேருக்கு மேல் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் ஆணைக்குழு, 11 பேருக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

இந்த விசாரணைக்கு முறையாக அழைப்பாணை அனுப்பப்பட்டு, இதுவரை முன்னிலையாகாத 11 பேருக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்ப ஆணைக்குழுவின் தலைவர் கோகுல்தாஸ் உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே, இந்த விவகாரம் குறித்து விழுப்புரம் சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு சாராய வியாபாரிகள் உட்பட 24 பேரை கைது செய்துள்ள நிலையில், 11 பேரின் வங்கிக் கணக்குகளை முடக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலைதீவு மீனவர் இருவரையும் விடுவிக்க நடவடிக்கை வேண்டும்!

## மீனவ அமைப்புக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 11

**இயந்திரக் கோளாறு காரணமாக இந்தியாவில் கரையொதுங்கிய இலங்கை மீனவர்கள் இருவரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வடக்கு மாகாண மீனவஅமைப்புக்களின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அனலைதீவுப் பகுதியில் இருந்து கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி கடலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள், கடல் சீற்றம் காரணமாக இயந்திரம் பழுதடைந்த நிலையில் கடலில் காணாமல் போயிருந்தனர்.

காணாமல்போன மீனவர்கள் ஜூ மாதம் 12 ஆம் திகதி இந்தியாவின் நாகப்பட்டினம் - ஆற்காட்டுதுறை மீனவர்களினால் பாதுகாப்பான முறையில் மீட்கப்பட்டனர்.

மேலும் இதன்போது குறித்த மீனவர்கள் விசாரணை நிமித்தம் இந்திய கரையோர காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

எவ்வாறாயினும் குறித்த மீனவர்கள் இரண்டு மாதங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை விடுவிக்கப்படவில்லை என வடக்கு மாகாண மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே குறித்த மீனவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த இரண்டு மீனவர்களும் நல்லெண்ண அடிப்படையில் நாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், மத்திய அரசு, வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரிடம் வடக்கு-கிழக்கு மீனவர்கள் சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (அ)

# தனியார் பஸ் - கப் வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்து

பதுளை, ஓக. 12

பதுளை - எல்ல வெல்லவாய பிரதான வீதியின் வெள்ளவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரந்தெனிய பகுதியில் தனியார் பேருந்தும் கப் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

வெள்ளவாயவிலிருந்து எல்ல நோக்கி பயணித்த கப் வாகனமும், வெள்ளவாயவிலிருந்து ரந்தெனிய நோக்கி பயணித்த தனியார் பேருந்தும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தின் போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இருப்பினும், இரு வாகனங்களும் பலத்த சேதமடைந்தன.

கப் ரக வாகன சாரதியின் கவனக்குறைவே இந்த விபத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)






# சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவு

கொழும்பு, ஓக. 11

2020 பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக, பாராளுமன்றத்துக்கு பிரவேசித்த பாராளுமன்ற உறுப்பினர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் அரசியல் பயணத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண்டார்.

இவர் கம்பஹா மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் பாரியாராவார். பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்துள்ள இவர் கடந்த அரசாங்கத்தின் கீழ், ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோயியல் மற்றும் கோவிட் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

திருமதி பெர்னாண்டோபுள்ளே முன்பு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்தார். (அ)

# ரணில் நாட்டைப் பொறுப்பேற்காமல் இருந்திருந்தால் பங்களாதேஷைவிட மோசமான நிலை இலங்கைக்கு!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஓக. 11

அன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்காமல் இருந்திருந்தால் இன்று பங்களாதேஷை விட மோசமான நிலைமைக்கு இலங்கை வந்திருக்கும் என நகர மற்றும் நிர்மாணம் அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இன்று பங்களாதேஷின் தலைவிதியை எமது நாட்டிற்கு கொண்டு வருவதை இலக்காகக் கொண்ட அரகல என அழைக்கப்படும் இந்த போராட்டம், ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வராவிட்டால், நாடு பங்களாதேஷைப் போன்று குழப்பமான நிலைக்குத் தள்ளப்படும் எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

மக்களின் கருத்துக்கு செவி



சாய்க்காமல் அரசியல் செய்ய முடியாது என கூறிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தான் இன்னும் அசல் மொட்டுத்தான் என தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் பொலன்னறுவை மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு திரண்டிருந்த பொலனறுவை மாவட்டத்தின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் கைகளை உயர்த்தி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்தனர்.

பொலனறுவை மாவட்டத்தில் பொலன்னறுவை, மெதிரிகிரிய மற்றும் மின்னேரிய ஆகிய தேர்தல் தொகுதிகளில் உள்ளூராட்சி மன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 08 ஆகும். அந்த எட்டு உள்ளூராட்சி மன்றங்களில் ஒன்று நகர சபை, மற்றவை அனைத்தும் பிரதேச சபைகள். இந்த கூட்டத்தில் 96 முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (அ)

# ஜனாதிபதி ரணில், சஜித்தை சந்திக்கின்றார் சுமந்திரன்!

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாளை மறுதினம் சுமந்திரன் எம். பி. சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் சுமந்திரன் எம். பியும் தொலைபேசி மூலம் பேசி இந்த சந்திப்புக்கான நேரத்தை ஒதுக்கினர் என்று அறிய வருகின்றது.

இதன்போது மாகாண சபைகள் தேர்தல் திருத்தச்சட்டத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள், மாகாண சபைகளின் அதிகாரங்களை உறுதிப்படுத்துவதற்கான சட்ட திருத்தங்கள் பற்றி ஆராயப்படும் என்று கூறப்பட்டது.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் சுமந்திரன் எம்.பிக்கும் இடையிலான சந்திப்பும் இந்த வாரம் நடைபெறும் என்று கூறப்படுகின்றது.

இதேபோன்று, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமாரவையும் சுமந்திரன் எம். பி. சந்திக்கவுள்ளார். எனினும், இந்த சந்திப்பு தொடர்பில் உத்தியோகபூர்வ தகவல் எதுவும் வெளியாகவில்லை. (ஐ)

# 33,961 டெங்கு நோயாளர் பதிவு!




கொழும்பு, ஓக. 12

நாட்டில் நடப்பு ஆண்டில் இதுவரை 33 ஆயிரத்து 961 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தில் - 13 ஆயிரத்து 781 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 8 ஆயிரத்து 179 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேலும், இந்த வருடத்தில் டெங்கு தொற்றால் 16 பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சஜித்துக்கு ஆதரவளிக்கும் மலையக மக்கள் முன்னணி

கொழும்பு, ஓக 12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி மேற்கொண்ட தீர்மானத்துக்கு மலையக மக்கள் முன்னணியின் தேசிய சபை அனுமதி வழங்கியுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் இந்த விடயத்தை தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி மேற்கொண்ட தீர்மானத்துக்கு மலையக மக்கள் முன்னணியின் தேசிய சபை அனுமதி வழங்கியுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் தேசிய சபை தலவாக்கலையில் தனியார் கலாசார மண்டபத்தில் கூடியது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இராதாகிருஷ்ணன் தலைமையில் இந்த கூட்டம் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தில் கட்சியின் செயலாளர் நாயகம் விஜயசந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், பிரதித் தலைவருமான ஆர்.இராஜாராம், மலையக தொழிலாளர் முன்னணியின் செயலாளர் புஷ்பா விஷ்வநாதன், பதுளை மாவட்ட அமைப்பாளர் ஆதரவாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி அடிப்படையில் தீர்வுக்கு பிரதான வேட்பாளர்கள் தயாரா?

## கேள்வி எழுப்புகின்றார் சிறீதரன்

கிளிநொச்சி, ஓக. 12

**இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு வழங்குவதாக தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களில் எவரேனும் எழுத்துபூர்வமாக உறுதியளிக்க முன்வருவார்களா என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

அத்துடன், அவ்வாறு செயற்படும் பட்சத்தில் அது தொடர்பில் பரிசீலிப்பதற்கு பொதுக் கட்டமைப்பு தயார் எனவும், அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இக்கால கட்டத்தில் தற்போது எம்மிடம் இருப்பது ஒரேயொரு ஜனநாயக உரிமையான வாக்கு எனும் ஆயுதம் ஆகும். அதனை எவ்வாறு பிரயோகிக்கப் போகின்றோம் என்பதில் தமிழ் பொதுவேட்பாளர் என்னும் விடயமும் உள்ளடங்கியிருக்கின்றது.

இந்த நிலையில் இந்த பொது வேட்பாளர் விடயத்தை எதிர்ப்பவர்கள் என்ன காரணத்துக்காக எதிர்க்கின்றார்கள் என்றும், யாரை இந்த தேர்தலில் ஆதரிக்கின்றார்கள் என்பதையும் வெளிப்படுத்த வேண்டும்.



அத்துடன், வரலாற்றில் இந்தத் தேர்தல் காலத்திலேயே தென்னிலங்கைக் கட்சிகள் நேரடியாகவே யாழ்ப்பாணத்திற்கு வந்து தமக்கு ஆதரவளிக்குமாறு கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ள விடயம், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற நிலைப்பாடு ஏதோவொரு விதத்தில் தென்னிலங்கைக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இழந்துபோன எமது இனத்தின் இறைமையை மீட்டெடுப்பதற்காக இந்த்த தேர்தலிலும் நாம் தொடர்ந்தும் போராடுவோம்-என்றார். (அ)

# தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழரை அந்நியப்படுத்தும்!

## நாலக கொடஹேவா சொல்கிறார்

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் போட்டியிடுவது தமிழர்களை அந்நியப்படுத்தும் செயல்பாடு என்று பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தல் என்பது முழு இலங்கைக்குமானதாகும். அதில் தமிழ் மக்கள் பங்காளிகளாக இருக்க வேண்டும். அதுதான் ஜனநாயக ரீதியான மரபாகும். ஆனால், தற்போது தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த முயற்சி நடைமுறைக்கு சாத்தியமற்றதாகும்.

தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் ஊடாக தமிழ் மக்கள் தமது ஆட்சி தலைமையை தெரிவு செய்யும் வாய்ப்பை பெறமுடியாதவர்களாக உள்ளனர். இது அவர்களின் எதிர்காலத்துடன் சம்பந்தப்பட்ட விடயமாகும்.

என்னைப் பொறுத்தவரையில், தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்துவது அந்த மக்களின் இறைமையாக இருந்தாலும் அந்த விடயம் தமிழ் மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்க வேண்டியது அமைய வேண்டும்.

தற்போதைய நிலையில் தென்னிலங்கையில் மூன்றுக்கும் அதிகமான போட்டிகள் அதிகரித்துள்ள நிலையில் தேசிய கட்சியுடன் பேரம்பேசல்களை செய்வதன் ஊடாகவே தங்களது உரிமைகளை நோக்கி நகரலாம் - என்றார். (ஐ)

# 16 ஆம் திகதி முதல் சூறாவளி பிரசாரம்

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரதான பரப்புரை போரை எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் முழு வீச்சுடன் முன்னெடுப்பதற்கு பிரதான கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவை தாக்கல் செய்த பின்னர், அன்றைய தினம் பிரதான கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்கள் ஆன்மீக வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர்.

மறுநாள் 16 ஆம் திகதி முதல் தேர்தல் பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி சஜித் பிரேமதாஸவின் முதலாவது பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டம் குருணாகலையில் நடைபெறவுள்ளது. ஐக்கிய மக்கள் கூட்டணியில் பங்காளிக் கட்சித் தலைவர்களும் இதில் பங்கேற்கவுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலை வெற்றிகொள்வதற்கு சஜித் தலைமையில் இவ்வாறு 100 பிரதானக் கூட்டங்கள் 25 மாவட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் முதலாவது பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டம் அநுராதபுரத்தில் நடைபெறும் என தெரியவருகின்றது.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்கும் கூட்டம் தொடர்பான அறிவித்தல்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. (அ)

# சஜித்தின் கூட்டணி எமக்கு சவால் அல்ல!

## கூறுகிறார் அநுரகுமார




கொழும்பு, ஓக. 12

"ஐக்கிய மக்கள் கூட்டணியானது தேசிய மக்கள் சக்திக்கு எவ்விதத்திலும் சவாலாக அமையாது." - என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

"இந்நாட்டை இதுவரையில் நாசமாக்கிய குழுக்கள் புதிய பெயர்களில் கூட்டணிகளை அமைத்துவருகின்றன. அவ்வாறு அமையும் கூட்டணிகள் தேசிய மக்கள் சக்திக்கு சவால் கிடையாது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பொன்சேகா வெளியில் இருக்கின்றார், மொட்டு கட்சியின் தவிசாளர் பீரிஸ் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இருக்கின்றார், இதனால் மக்களுக்கு ஏற்படும் நன்மை என்ன?

பாராளுமன்ற உறுப்பினர்கள் மாறினாலும் மக்கள் எம்முடன் இருக்கின்றனர். மக்களே தீர்மானிக்கும் சக்தி. நாமல் ராஜபக்ஷவும் எமக்கு சவால் அல்லர்." - எனவும் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார். (அ)

# வெளிநாட்டு கனவில் இருக்கும் இளைஞர்களிடம் பணம் மோசடி!

## வங்கிக் கணக்கிலிருந்து நூதனமாக முறையில் ரூ.52 இலட்சம் பணத்தை திருடிய இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 11

கிளிநொச்சி, தர்மபுரத்தைச் சேர்ந்த ஒருவரின் வங்கிக் கணக்கிலிருந்து நூதனமாக முறையில் ரூ.52 இலட்சம் ரூபா பணத்தை திருடிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னதாக, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரின் வங்கிக் கணக்கிலிருந்து ரூ.65 இலட்சம் ரூபா பணத்தை திருடிய கும்பலே இந்த திருட்டிலும் ஈடுபட்டுள்ளது. இந்த குழுவினர் வடக்கிலுள்ள பலரது வங்கிக் கணக்கிலிருந்து பல கோடி ரூபா பணத்தை திருடியுள்ளமை விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வெளிநாடு செல்வதற்கு முயற்சித்தார். இதற்காக முகவர்களை அணுகியபோது, அவர்கள் பிரித்தானியாவிலுள்ள ஒருவரை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

அவரது வங்கிக்கணக்கில் ஒரு தொகைப்பணத்தை வைப்பிலிட்டு, அதன் விவரத்தை தமக்கு அனுப்பி வைக்குமாறு பிரித்தானிய நபர் கூறியுள்ளனர்.

அந்த இளைஞன், ஒரு தொகைப்பணத்தை வங்கியில் வைப்பிலிட்டு, அதன் விவரத்தையும், மின்னஞ்சல் முகவரியையும் அனுப்பி வைத்துள்ளார்.

பின்னர், தர்மபுரம் இளைஞனை தொடர்பு கொண்ட பிரித்தானிய நபர், அவரது கையடக்க தொலைபேசிக்கு வரும் இலக்கத்தை அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார். இதன்படி, அந்த இளைஞனும் கையடக்க தொலைபேசிக்கு வந்த இலக்கத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அதன்பின்னர் அந்த இளைஞனுக்கு கையடக்க தொலைபேசிக்கு பணப்பரிமாற்ற குறுந்தகவல்கள் வரவில்லை.

பின்னர், சில நாட்களின் பின்னர் வங்கிக் கணக்கை பரிசீலித்த போது, அதில் 52 இலட்சம் ரூபா பணம் காணாமல் போயிருந்ததை அறிந்து அதிர்ச்சியடைந்தார். இது தொடர்பில் அவர் கிளிநொச்சி, இரணைமடுவிலுள்ள பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், அந்த இளைஞனின் வங்கிக் கணக்கில் இருந்த பணம், அந்த இளைஞனை தொடர்பு கொண்டவர்களில் ஒருவரான புதுக்குடியிருப்பைச் சேர்ந்த முகவர் ஒருவரின் வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் உள்ள இளைஞனின் தம்பியான யாழ்ப்பாணம், கோப்பாயைச் சேர்ந்த கணினி மென்பொறியியலாளரான இளைஞன் ஒருவர் புதுக்குடியிருப்புக்கு சென்று பணத்தை வாங்கியுள்ளார்.

பின்னர், ஒரு தொகைப் பணத்தை தனக்கு எடுத்துக் கொண்டு பெரும்பகுதிப் பணத்தை நெல்லியடியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் ஊடாக உண்டியல் முறையில் சகோதரனுக்கு அனுப்பியுள்ளார்.

பருத்தித்துறை, புதுக்குடியிருப்பை சேர்ந்த இரண்டு முகவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் புதுக்குடியிருப்பு, வள்ளிபுனத்தை சேர்ந்த முகவர், தன்னை முன்னாள் போராளியென அடையாளப்படுத்திக் கொண்டு, மாவீரர் தினம், முள்ளிவாய்க்கால் நினைவு தினங்களில் முன்னணியில் செயற்படுபவர். இலங்கை தமிழ் அரசு கட்சியிலும் செயற்பட்டார். பின்னர், இராணுவத்துடன் அவர் சேர்ந்தியங்கும் தொலைபேசி உரையாடல் பதிவு வெளியானதையடுத்து, கட்சிக்குள் அழைக்கப்படுவதில்லை.

இதேபோல, சில நாட்களின் முன்னர் யாழ்ப்பாணம், குருநகரை சேர்ந்த ஒரு இளைஞன் வெளிநாடு செல்ல முயன்றார். அவரும் இதே மோசடிக் கும்பலிடம் சிக்கி, 65 இலட்சம் ரூபா பணத்தை இழந்துள்ளார்.

பிரித்தானியாவிலுள்ள ஒருவர், யாழ்ப்பாணம், கச்சேரியடியிலுள்ள பெண் ஒருவருடன் தொலைபேசியில் அறிமுகமாகி, நெருக்கமாக பேசி வந்துள்ளனர்.

அந்த பெண்ணை அவசரமாக வங்கியொன்றில் கணக்கை திறக்க வைத்து, அந்த பெண்ணின் வங்கிக் கணக்கிற்கு இளைஞனின் வங்கிக் கணக்கிலிருந்து ரூ.65 இலட்சம் மாற்றப்பட்டது.

இளைஞனின் சிம் அட்டை செயலிழக்க செய்யப்பட்டு, ஈ-சிம் அட்டை பெற்று, இளைஞனின் வங்கி குறுந்தகவல் சேவை கிடைக்காமல் செய்தனர்.

அந்த இளைஞனின் வங்கியிலிருந்து திருடப்பட்ட பணம், கச்சேரியடி பெண்ணின் வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. அந்த பெண்ணிடம் சென்று, கோப்பாய் இளைஞன் பணத்தை பெற்றார். ரூ.25 இலட்சத்தை தனக்கு எடுத்துக்கொண்டு, ரூ.40 இலட்சத்தை நெல்லியடியில் உள்ள நிறுவனம் ஒன்றின் ஊடாக உண்டியல் முறையில் பிரித்தானியாவிலுள்ளவருக்கு அனுப்பியிருந்தார்.

அந்த இளைஞனும், அவருக்கு உடந்தையாக செயற்பட்ட ஒரு இளைஞனும், கச்சேரியடி பெண்ணும் யாழ்ப்பாணம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோசடியின் சூத்திரதாரியான பிரித்தானிய நபரை சர்வதேச பொலிசார் ஊடாக கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினேஸ், காமினி லொக்குகே, சாகரவை வேட்பாளராக்குவது குறித்து பேசினோம்!

## பஸில் ராஜபக்ஷ தகவல்



கொழும்பு, ஓக. 12

**தம்மிக பெரேரா போட்டியிலிருந்து விலகிய பின்னர் ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதற்காக தினேஸ் குணவர்த்தன, காமினி லொக்குகே உட்பட பலர் குறித்து ஆராய்ந்தோம் என தெரிவித்துள்ள முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, விஜயதாஸவைக்கூட ஆதரித்திருப்போம் என குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தம்மிக பெரேரா போட்டியிலிருந்து விலகிய பின்னர் நாங்கள் பல பெயர்களை ஆராய்ந்தோம்.

பிரதமர் தினேஸ் குணவர்த்தன, பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே, கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் ஆகியோரை வேட்பாளராக நிறுத்துவது குறித்து ஆராய்ந்தோம்.

கட்சியின் பிரதேச அமைப்புகள் வேண்டுகோள் விடுத்த தன் காரணமாக நாமல் ராஜபக்ஷவை நியமிக்க தீர்மானித்தோம். நாமல் அதற்கு இணங்கினார்.

எங்களிடம் தகுதியான ஏனைய வேட்பாளர்கள் இருந்தனர். விஜயதாஸ ராஜபக்ஷவை கூட நாங்கள் ஆதரித்திருப்போம்,அவர் வேறு கட்சியின் கீழ் போட்டியிட்டாலும் அவர் இன்னமும் பாராளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினரே.

தற்போதைக்கு நாங்கள் தேர்தல் குறித்து கவனம் செலுத்துவோம் .பலர் தங்கள் தவறுகளை உணர்ந்து மீள வருவார்கள்.

கட்சியின் நலனுக்கு எதிராக செயற்படுபவர்கள் குறித்து நீண்ட நாட்களாக எங்களுக்கு தெரியும். மேலும் இருவர் உள்ளனர்,அவர்கள் என்ன செய்ய திட்டமிடுகின்றனர் என்பதும் எங்களுக்கு தெரியும்-என்றார். (அ)

# ஆட்கடத்தல் சம்பவம் குறித்து தேடப்பட்ட சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஓக. 12

இலங்கையர்களுடன் தொடர்புடைய ஆட்கடத்தல் சம்பவமொன்று தொடர்பில் சுமார் 3 வருடங்களாகத் தேடப்பட்டுவந்த முக்கிய சந்தேகநபர் ஒருவர் இந்தியாவின் தேசிய புலனாய்வு முகவரகத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த சீனி அபூல்கான் என்ற குறித்த நபர் தமிழகத்தின் இராமநாதபுரத்தில் தலைமறைவாகியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆட்கடத்தல்காரர்களிடமிருந்து 13 இலங்கை பிரஜைகள் மீட்கப்பட்டிருந்த நிலையில் அதன் பின்னர் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்படி இந்தியாவின் தேசிய புலனாய்வு முகவரகம் முன்னெடுத்த விசாரணைகளுக்கமைய, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முன்னதாக தொடர்புகளைக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் ஈசன் என அடையாளம் காணப்பட்ட இலங்கையர் ஒருவரே இந்த மோசடியின் பிரதான சந்தேகநபர் என அடையாளம் காணப்பட்டார்.

அவர் அபூல்கான் என்ற குறித்த சந்தேகநபர் உள்ளிட்ட பலருடன் இணைந்து 38 இலங்கைப் பிரஜைகளைத் தமிழ்நாட்டிற்குள் பல்வேறு இடங்களுக்குச் சட்டவிரோதமாக அழைத்துச் சென்றுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் கடந்த 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை தலைமறைவான 3 பேர் உட்பட 10 பேர் மீது இந்தியாவின் தேசிய புலனாய்வு முகவரகம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

இவ்வாறான பின்னணியில் தலைமறைவான எஞ்சியவர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இளைஞர்கள் நன்மையடையும் சூழலொன்று உருவாக்கப்படும்!

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்



கொழும்பு, ஓக. 12

அம்பாந்தோட்டை பிரதேசத்தின் தோல்வியடைந்த அபிவிருத்தித் திட்டங்களை வெற்றியடையச் செய்வதன் மூலம் குறித்த பிரதேசத்தின் இளைஞர் சமூகம் நன்மையடையும் சூழல் ஒன்று உருவாக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.


அம்பாந்தோட்டை - வீரகெட்டிய பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாநாட்டில் அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த அரசியல் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு ஒன்றும் இணைந்துகொண்டது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, திலீப் வெதஆராச்சி, ஹேஷா விதானகே, கலாநிதி உபுல் கலப்பிட்டி மற்றும் ஓய்வுபெற்ற ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# 36 கைபேசிகள், 6 மடிக்கணினிகளுடன் மூவர் கட்டுநாயக்காவில் வைத்து கைது!



கொழும்பு, ஓக. 12

இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட 36 கையடக்க தொலைபேசிகள் மற்றும் 06 மடிக்கணினிகள் ஆகியவற்றுடன் மூவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் கொழும்பு தெமட்டகொடை பிரதேசத்தில் வசிக்கும் 40 - 45 வயதுக் குட்பட்ட வர்த்தகர்கள் ஆவர்.

இந்த சந்தேக நபர்கள் நேற்று முன் தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் டுபாயிலிருந்து எமிரேட்ஸ் ஏயார்லைன்ஸின் ஈ.கே-649 விமானத்தின் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் விமான நிலையத்தை விட்டு வெளியேறும்போது, அவர்களது பயணப்பைகளை அதிகாரிகளால் சோதனையிடப்பட்டன. அவ்வேளை மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்க தொலைபேசிகள் மற்றும் மடிக்கணினிகள் கண்டெடுக்கப்பட்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து, கைதான மூவரையும் சட்டவிரோதமாக கொண்டு வந்த கையடக்க தொலைபேசிகள் மற்றும் மடிக்கணினிகள் ஆகியவற்றையும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதையடுத்து, சுங்கத்துறை அதிகாரி, சோதனை நடத்திய தன் பின்னர் கையடக்க தொலைப்பேசிகள் மற்றும் மடிக்கணினிகளை பறிமுதல் செய்ததோடு, கைதான மூவருக்கும் 16 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டார். (அ)

# தேர்தல் தொடர்பில் 320 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 51 முறைப்பாடுகள் நேற்று முன் தினம் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி தேர்தல் சட்ட மீறல் தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 25 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 26 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை கடந்த ஜூலை 31 திகதி முதல் நேற்று வரை ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 320 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# கப்பலில் பெரும் தீ!

கொழும்பு, ஓக. 12

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த சரக்குக் கப்பலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தீ மற்றும் வெடிப்பு ஏற்பட்டதாக இலங்கை துறைமுக அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

துறைமுக தீயணைப்புப் பிரிவு உட்பட துறைமுக ஊழியர்கள் தீயைக் கட்டுப்படுத்தி அணைத்ததாகவும், தீயை அணைக்க முடியாவிட்டால் பெரும் அழிவை ஏற்படுத்தியிருக்கும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

தீயினால் கப்பலுக்கு ஏற்பட்ட சேதம் இதுவரை மதிப்பிடப்படவில்லை எனினும் சரக்கு மற்றும் கப்பலுக்கு அதிக சேதம் ஏற்பட்டுள்ளதாக சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

# துப்பாக்கிகள், தோட்டாவுடன் சிறைக்காவலர் ஒருவர் கைது!

கொழும்பு, ஓக. 12

ரி-56 ரக துப்பாக்கி, கைத்துப்பாக்கி மற்றும் பல்வேறு வகையான தோட்டாக்களுடன் சிறைக்காவலர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராஜகிரிய பகுதியில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தினால் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர் கைதுசெய்யப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தோட்டாக்களில் 350 ரீ-56 ரக தோட்டாக்களும் ஐம்பது 9 மில்லிமீற்றர் ரவைகள் மற்றும் 15.56 மில்லிமீற்றர் ரகத்தைச் சேர்ந்த 8 தோட்டாக்களும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுமார் 6 கிராம் ஹெரோயின், 700 மில்லிகிராம் கஞ்சா மற்றும் 200 மில்லிகிராம் குஷ் ரக போதைப் பொருள் என்பனவும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டு போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# கார் தீயில் எரிந்து நாசம்!

கொழும்பு, ஓக. 12

பெலியத்தை குடாஹில்லஜய மாவத்தையில் ஓய்வுபெற்ற பொது சுகாதார பரிசோதகர் ஒருவரின் கார் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தீயில் எரிந்து நாசமானதாக பெலியத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த அதிகாரியின் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் தீப்பிடித்துள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

தீ விபத்தில் கார் முற்றிலும் எரிந்து நாசமாகியுள்ள நிலையில், காருக்கு யாராவது தீ வைத்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பில் பெலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மாணவர்கள் மத்தியில் வகுப்புவாத மோதல்கள்

## குற்றச்செயல்களை தடுப்பதற்கு ஆசிரியர்கள் முன்வர வேண்டும்

மட்டக்களப்பு, ஓக. 12

**மாணவர்கள் மத்தியில் அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனை, வகுப்புவாத மோதல் உள்ளிட்ட குற்றச் செயல்களைத் தடுக்க ஆசிரியர்கள் முன்வர வேண்டும் என்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் இரா. முரளீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

மட்டக்களப்பு மேற்கு வலய மாணவர்களின் உளவள ஆற்றுகையை மேம்படுத்தும் செயல்திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் செயலமர்வு மட்டக்களப்பில் நடைபெற்றது.

யாழ். மருத்துவபீட வெளிநாட்டு பழைய மாணவர் சங்கத்தின் நிதி அனுசரணையில், மட்டக்களப்பு மாவட்ட உளநல பிரிவினரது ஒருங்கிணைப்பில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் பணிப்பாளர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் இந்தச் செயலமர்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய பாடசாலைகளில் உளவள ஆற்றுகைப்படுத்தும் பணியை மேற்கொள்ளும் ஆசிரியர்களை பயிற்சியளிக்கும் முகமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த பயிற்சிப் பட்டறைக்கு,

மட்டக்களப்பு மாவட்ட உளநல ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் டி. சௌந்தரராஜா, வவுணதீவு பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி எஸ். ஏ. ஜோதிலட்சுமி, உளநல சமூக சேவையாளர் என். நித்தியானந்தன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இங்கு மருத்துவர் இரா. முரளீஸ்வரன் உரையாற்றுகையில்,

மாணவர்கள் பிரச்னைகளை எதிர்கொள்ளுதல், வாழ்க்கையை திட்டமிடுதல், சரியான தீர்மானம் மேற்கொள்ளல் போன்ற ஆற்றலை சிறுவயதில் இருந்துதே வளர்ப்பதன் மூலமே எதிர்கால சமூகத்தின் ஆரோக்கியத்தை உறுதி செய்ய முடியும். குறிப்பாக வாழ்நாள் முழுவதையும் மகிழ்ச்சிகரமாக்குவதற்கு, இளமைப் பருவ உளஆற்றுகை மிகமுக்கியமானதாகும்.

பாடசாலை இடைவிலகல், இளவயது கர்ப்பம், போதைப் பொருள் பாவனை, வகுப்புவாத மோதல் என்பனவற்றை தடுக்க வேண்டும். தற்கொலை போன்ற ஒழுக்க மாறான சமூக உருவாக்கத்தை இல்லாதொழித்து, சமூகத்தை நல்வழிப்படுத்த வேண்டும். பெற்றோரின் பங்களிப்புக்கு சமாந்தரமாக பாடசாலை ஆசிரியர்களின் பங்களிப்பும் இதற்கு மிக அவசியம்- என்றார். (எ)

# நான்கு குடும்பங்களுக்கு நிரந்தர வீடு கையளிப்பு

திருகோணமலை, ஓக. 12

"சமூகங்களை கட்டியெழுப்புதல்" திட்டத்தின் கீழ் பிளஜ் டு டெஸ்டோ பௌண்டேஷன் நிதி அனுசரணையுடன் ஜீவ ஊற்று அன்பின் கரத்தின் இணைப்பாக்கத்தில், சொந்த வீடுகள் இன்றி வாழ்ந்து வந்த நான்கு குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை கையளிக்கும் நிகழ்வு திருகோணமலை - எல்லைக் கிராமமாகிய தென்னமரவடி கிராமத்தில் நடைபெற்றது.

திருகோணமலை நகரில் இருந்து 80 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள குறித்த கிராமத்தில் வசித்து வருகின்ற பொது மக்கள் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த பின்னர் போதுமான அடிப்படை வசதிகள் இன்றி தினமும் புறக்கணிக்கப்படும் நிலையில் தமது வாழ்க்கையை நடத்திவந்த நிலையில் அம் மக்களுக்கான உதவித்திட்டமாக இது அமைந்துள்ளது.

வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் பிரதேச செயலாளர் குணநாதன், பௌண்டேஷனின் ஸ்தாபகர் த. உதயன் பத்மநாதன், ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் அமைப்பின் செயலாளர் ஜே. ரி. பிரவின் மற்றும் திருகோணமலை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் அத்தநாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வீடுகளை பயனாளிகளுக்கு கையளித்தனர். (எ)

# 13 பதக்கங்களை வென்று தேசிய மட்டத்துக்கு தெரிவு



கல்முனை, ஓக. 12

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரி மாணவர்கள் கிழக்கு மாகாண மட்ட கராத்தே போட்டியில் வெற்றிபெற்று தேசிய மட்ட போட்டிக்கு தகுதி பெற்றனர்.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட கராத்தே போட்டிகளில் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரி மாணவர்கள் 2 தங்கப்பதக்கங்களையும், 08 வெள்ளிப் பதக்கங்களையும், 03 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று கல்முனை வலயத்தில் முதல் இடத்தை பெற்றுள்ளதோடு தேசிய மட்ட போட்டிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் நடைபெற்ற கிழக்கு மாகாண மட்ட கராத்தே போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், அவர்களைப் பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளர் எஸ் .பாலுராஜூக்கும் பல்வேறு தரப்பினரும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர். (எ)





காரைதீவு சிறீ சித்தானைக்குட்டி சுவாமியின் 73 ஆவது குரு பூசையை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பால்குட பவனி மற்றும் திருவிளக்கு பூஜை, கோமாதா பூஜையின் போது...

# விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா

கல்முனை, ஓக. 12

கல்முனை இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயத்தில் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா தொடர் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடத்திய அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா பாடசாலையின் அதிபர் திருமதி விஜயசாந்தி நந்தபாலா தலைமையில் நடைபெற்றது.





இந்த நிகழ்வில் கல்முனை வலயக்கல்விப் பணிமனையின் இந்து சமய பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகர் ம. லக்குணம், தொழில் வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் எஸ். சிவசுந்தரமூர்த்தி மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி நா. சிறீ பிரியா, சைவப் புலவர் ஜோ. கஜேந்திரா, வளவாளர் நா. சனாதனன், சொற்பொழிவாளர் ஒன்றியத்தின் நிர்வாக உறுப்பினர்களான கு. கிலஷன், கோ. திருநாகரன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப்படங்களை சமயப்பற்றாளர் எஸ். மகேந்திரன், சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த பணிமன்றத்துக்கு வழங்கி வைத்தார். இதனை பாடசாலைகளுக்கு மன்ற உறுப்பினர்கள் திணைக்களத்துடன் இணைந்து வழங்கினர்.

இந்த நிகழ்வின் ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டார்.


விழாத் தொடரின் நான்காவது பாடசாலை நிகழ்வு இதுவாகும். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய எல்லையில் குவியும் பங்களாதேஷ் இந்துக்கள்!

புதுடில்லி, ஒக. 12

**தாக்குதல்கள் அதிகரித்து வரும் நிலையில் பங்களா தேஷை சேர்ந்த இந்துக்கள், இந்தியாவுக்குள் நுழைய எல்லைகளில் குவிந்து வருகின்றனர். இதனால் இந்திய எல்லைகளில் பதற்றம் அதிகரித்துள்ளது.**



பங்களாதேஷில் இடஒதுக்கீட்டு நடைமுறையை எதிர்த்து கடந்த ஜூன், ஜூலையில் மாணவர் சங்கங்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தின. இதில் 560 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

மாணவர்கள் போராட்டம் ஓய்ந்தாலும் பங்களாதேஷ் முழுவதும் இந்துக்கள் மீதும் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. சுமார் 17,000 இந்துக் குடும்பங்கள் வன்முறையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்துக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்த நிலையில், இந்தியாவின் மேற்குவங்கம், திரிபுரா, அசாம், மிசோரம், மணிப்பூர் ஆகிய 5 மாநிலங்கள் பங்களாதேஷ் எல்லையில் அமைந்துள்ளன. இந்த 5 மாநிலங்களின் எல்லைப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான பங்களாதேஷ் இந்துக்கள் குவிந்து வருகின்றனர்.


இதேவேளை, பங்களாதேஷில் 32 சதவீதமாக இருந்த இந்துக்களின் மக்கள் தொகை தற்போது 8 சதவீதமாக குறைந்திருக்கிறது.

இந்துக்கள் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்த பங்களாதேஷ் இடைக்கால அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

மாணவர்கள் மீண்டும் போராட்டம்

# உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி இராஜினாமா!

டாக்கா, ஒக. 12



பங்களாதேஷில் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், அந்த நாட்டு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் சிரேஷ்ட நீதிபதிகள் பதவி விலக வேண்டும் என கோஷமிட்டனர். இதனையடுத்து தலைமை நீதிபதி தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் விசுவாசியாக கருதப்படும் பங்களாதேஷ் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஒபய்துல் ஹாசன் மற்றும் சிரேஷ்ட நீதிபதிகள் தங்களது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என மாணவர் அமைப்பின் தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர். இடஒதுக்கீடு சதியில் இவர்களுக்கும் பங்கு உண்டு என அவர்கள் குற்றம்சாட்டினர். இதனையடுத்து உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ஆலோசனை கூட்டத்துக்கு தலைமை நீதிபதி ஒபய்துல் ஹாசன் அழைப்பு விடுத்தார். இதை நீதித்துறை சதி என கூறிய போராட்டக்காரர்கள், மாணவர்கள் அமைப்பினர் உச்ச நீதிமன்ற வளாகத்தை முற்றுகையிடும்படி அழைப்பு விடுத்தனர்.

இதனையடுத்து உச்ச நீதிமன்ற வளாகம் முன்பு மாணவர்கள் திரண்டு போராட்டம் நடத்தி கோஷமிட்டனர். இதையறிந்த தலைமை நீதிபதி ஒபய்துல் ஹாசன் ஆலோசனை கூட்டத்தை ஒத்தி வைத்தார். மாணவர்கள் போராட்டம் நடத்தி நெருக்கடி கொடுத்ததால் தான் பதவி நீதிபதி ஒபய்துல் அறிவித்தார். (எ)

# அகதிகள் தஞ்சமடைந்த பாடசாலைமீது தாக்குதல்

## காஸாவில் 100 பேர் உயிரிழப்பு

காஸா, ஒக.12

காஸாவில் பலஸ்தீன அகதிகள் தஞ்சமடைந்திருந்த பாடசாலை மீது இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தியதில் 100 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். கிழக்கு காஸாவில் பாடசாலை ஒன்று அகதிகள் புகலிடமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த நிலையில், அங்கு மக்கள் தொழுகை நடத்திக் கொண்டிருந்தபோது தாக்குதல் நடத்தப்பட்டதாக ஹமாஸின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் காஸாவில் நான்கு பாடசாலைகளை இலக்கு வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதேவேளை, ஒகஸ்ட் 4 ஆம் திகதி இஸ்ரேலின் தாக்குதலில் அகதிகள் புகலிடமாக செயல்பட்ட 2 பாடசாலைகள் தகர்க்கப்பட்டன. இதில் 30 பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர். அதற்கு முந்தைய தினம் காஸா நகரின் ஹமாமா பாடசாலையில் நடந்த தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டனர். ஒகஸ்ட் முதலாம் திகதி தலால் அல் முக்ராபி பாடசாலையில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டனர். இந்த நிலையில், நேற்று முன்தினம் இஸ்ரேல் மீண்டும் அகதிகள் தஞ்சமடைந்திருந்த பாடசாலையை இலக்கு வைத்து தாக்குதலை நடத்தியுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் குழுவினர் நடத்திய தாக்குதலில் 1200 பேர் உயிரிழந்தனர். இதன் பின்னர் இஸ்ரேல் முழுவீச்சில் காஸா மீது தாக்குதலை தொடங்கியது. இதுவரை 40 ஆயிரம் பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். 10 மாதங்களுக்கும் மேலாக நீடிக்கும் இந்தப் போரை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஐ. நா. அமைப்பு வலியுறுத்தி வருகிறது. (எ)


# சீனாவில் 1000 கி. மீ. வேகத்தில் பயணிக்கும் ரயில் தயாரிப்பு!

பீஜிங், ஒக. 12

சீன அரசு அதிவேகத்தில் பயணிக்கும் ஹைப்பர்லூப் ரயிலை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. கடந்த ஆண்டு டத்தோங் நகரில், இதற்கென 2 கிலோ மீற்றர் வழித்தடத்தை உருவாக்கியது. இந்த நிலையில், இந்த வழித்தடத்தில் அதிகவேக ரயில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

இந்த அதிகவேக ரயில் மாக்லேவ் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் செயல்படக் கூடியது. இந்த ரயிலின் சக்கரம் தண்டவாளத்துடன் உராய்வு கொள்ளாது. இதனால், இந்த ரயிலால் விமானத்துக்கு நிகரான வேகத்தில் செல்ல முடியும் என்று கூறப்படுகிறது.

சோதனை ஓட்டத்தில் இந்த ரயில் எதிர்பார்த்த வேகத்தை அடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



ஷாங்சி மாகாண அரசு மற்றும் சீன விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்கழகம் இணைந்து அதிவேக ரயில் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது.

இந்த அதிவேக ரயில் பயன்பாட்டுக்கு வரும்பட்சத்தில் சீனத் தலைநகர் பீஜிங் மற்றும் ஷங்காய் இடையே உள்ள 1,200 கிலோ மீற்றர் தூரத்தை 90 நிமிடங்களில் கடக்க முடியும். தற்போது சீனாவில் பயன்பாட்டில் இருக்கும், மணிக்கு 350 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும் புல்லட் ரயில் மூலம் பீஜிங்கிலிருந்து - ஷங்காய்க்கு 4.18 மணி நேரத்தில் செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# பெண்ணின் திருமண வயது 9; ஈராக்கில் புதிய சட்ட திருத்தம்

பக்தாத், ஒக. 12

ஈராக் பாராளுமன்றம் பெண்களுக்கான சட்டப்பூர்வ திருமண வயதை 9 ஆக குறைப்பதற்கான சட்டத்தை அறிவித்துள்ளது.

ஈராக் நாட்டின் தனிநபர் சட்டத்தின்படி பெண்களின் குறைந்தபட்ச திருமண வயது 18ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்தை திருத்தும் முயற்சியில் நீதி அமைச்சு ஈடுபட்டுள்ளது. இதன்படி புதிய சட்ட திருத்தம், 9 வயது சிறுமிகளுக்கும் 15 வயது ஆண்களுக்கும் திருமணத்தை அனுமதிக்கிறது.

இஸ்லாமிய மதச்சட்டத்தை தரப்படுத்தவும் தகாத உறவுகளிலிருந்து இளம் பெண்களை பாதுகாக்கவும் திருமண வயது குறித்த புதிய சட்டத்தை கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால், இந்த சட்ட திருத்தம் குழந்தை திருமணத்தை ஊக்குவிக்கும் என்றும், குடும்ப விவகாரங்களில் நீதிமன்ற அதிகாரத்தை குறைத்து மதகுருமார்களின் கை ஓங்கச் செய்யும் என்றும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (எ)

# சிறுபான்மை மக்களின் மீது 205 தாக்குதல் சம்பவங்கள்

## இந்து அமைப்புகள் அதிர்ச்சி தகவல்

டாக்கா, ஒக. 12

பங்களாதேஷில் ஷேக் ஹசீனா அரசு கவிழ்ந்ததை அடுத்து அந்த நாட்டில் கடந்த சில நாட்களில் 205 தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளதாக இந்து அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

பங்களாதேஷின் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவுக்கு எதிராக வெடித்த பெரும் போராட்டம் காரணமாக அவர் கடந்த 5ஆம் திகதி பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவுக்கு தப்பிச் சென்றார். ஷேக் ஹசீனாவின் இராஜினாமாவை அடுத்து, அந்த நாட்டில் சிறுபான்மையினருக்கு எதிராக தாக்குதல்கள் அதிகரித்தன. இதனிடையே, நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் முகமது யூனுஸ் தலைமையில் தற்காலிக அரசு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பங்களாதேஷில் உள்ள இந்து அமைப்புகள், முகமது யூனுஸிடம் கடிதம் ஒன்றை கையளித்துள்ளன. அதில், "கடந்த 5ஆம் திகதி முதல் சிறுபான்மையினருக்கு எதிராக பங்களாதேஷில் 205 தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளன. ஆயிரக்கணக்கான இந்துக் குடும்பங்கள் நிர்க்கதியாகிவிட்டன. பல கோவில்கள் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டன. பல இந்துப் பெண்கள் தாக்குதலை எதிர்கொண்டுள்ளனர். பல இடங்களில் கொலைகள் நடந்தன. என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லயன் குடியிருப்பாளர்களுக்கு 7 பேர்ச் காணி வழங்குவோம்!

## ஜனாதிபதி ரணில் வாக்குறுதி



நுவரெலியா, ஓக. 12

**"கம்பனிகளுக்கு அரசாங்கம் வழங்கிய லயன் குடியிருப்பு காணிகளை மீளப்பெற்று ஒரு குடும்பத்துக்கு 7 பேர்ச் காணி வீதம் வழங்கப்படும்" - இவ்வாறு உறுதியளித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

ஹற்றன் நகரில் நேற்று முன்தினம் தமிழ், முஸ்லிம், சிங்கள வர்த்தகர்களை சந்தித்து பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பில்,

நான் முதன் முதலாக ஹற்றனுக்கு 1970களில் வந்தேன். அப்போது அபிவிருத்தியடைந்த நகராக ஹற்றன் இருக்கவில்லை. நுவரெலியாவும் அப்படியே. எனினும், இப்போது இந்த மாவட்டத்தின் சமூகக் கட்டமைப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆனால் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதை என்னால் நிச்சயமாக நிவர்த்தி செய்ய முடியும். அவர்களுக்கு உரித்துடன் கூடிய காணியை வழங்க நான் குழுவொன்றை நியமித்துள்ளேன்.

அப்போது பெருந்தோட்டங்களில் இருந்த பல தமிழ் வர்த்தகர்கள் இன்று நகரங்களில் உள்ளனர். இப்போது கல்வி அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

பெருந்தோட்ட பாடசாலைகளை நானே பொறுப்பேற்று அரச பாடசாலைகளாக்கினேன். அப்போது நகரப் பாடசாலைகள் சிலவே இருந்தன. இன்று பெருகியுள்ளன. இன்று வலுவான ஒரு சமூக கட்டமைப்பு நுவரெலியாவிலும் ஹற்றனிலும் உள்ளது.

இந்த பிரதேசத்தை இன்னும் அபிவிருத்தி செய்ய வேண்டும். விவசாயத்தை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் மூலமே இந்த கரங்களை அபிவிருத்தி செய்ய முடியும். சுற்றுலாத்துறையை மேம்படுத்த திட்டங்கள் உள்ளன.

இவை எல்லாவற்றையும்விட பெருந்தோட்டங்களுக்குள்ளே உள்ள குடியிருப்பு பிரச்னை முக்கியமானதாகும். தொழிலாளர்கள் இன்னும் லயன் குடியிருப்புகளிலேயே வாழ்கின்றனர். அவர்களுக்கு காணி உரிமை வழங்கப்படவில்லை. இந்த லயன் குடியிருப்பு நிலங் கள் அரசாங்கத்துக்கு சொந்தமானவை, ஆனால், அவை தற்காலிகமாகவே கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த குத்தகை ஒப்பந்தத்தை இரத்து செய்து அந்தக் காணிகளை மீண்டும் அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ளது. இதன் மூலம் அந்தக் குடியிருப்புகள் உள்ள காணிகளில் ஒரு குடும்பத்துக்கு ஏழு பேர்ச் காணி வீதம் அறுதி உரித்துடன் வழங்க முடிவெடுத்துள்ளோம். அதில் வீடுகளை அமைக்க அரசாங்கம் என்ற வகையில் நாம் அவர்களுக்கு உதவுவோம் - என்றார்.

# போட்டியிலிருந்து நாமல் விலகினால் பெரமுனவில் மீண்டும் இணைவோம்

## சந்திரசேன எம். பி. கூறுகிறார்

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ வேட்பு மனுவை தாக்கல் செய்யாமல் தவறை திருத்தினால் மீண்டும் பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைவோம். தன்னிச்சையாக எடுத்த தீர்மானத்தால் கட்சி பிளவடைந்துள்ளது என்று ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த சந்திப்பில், "சிறீ லங்கா பொதுஜன பெரமுன உறுப்பினரை வேட்பாளராகக் களமிறக்கக் கட்சி ஏகமனதாகத் தீர்மானித்ததாகக் குறிப்பிடுவது முற்றிலும் பொய். கடந்த மாதம் 29 ஆம் திகதி பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடந்த நிறைவேற்று சபை கூட்டத்தில் ஆளும் தரப்பின் 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே பங்கேற்றனர். கட்சியின் ஆதரவாளர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளே பெரும்பான்மையாகக் கலந்து கொண்டிருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாகவே எமக்கு ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டது. இந்த வாக்குறுதிக்குப் பின்னரே நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டோம். இருப்பினும் ஒரு தரப்பினரின் தன்னிச்சையான செயல்பாடுகளால் தவறான தீர்மானம் எடுக்கப்பட்டது.

தம்மிக பெரேரா இறுதி நேரத்தில் போட்டியிட முடியாது என்று குறிப்பிட்டார். ஆகவே, நாமல் ராஜபக்ஷவை வேட்பாளராகக் களமிறக்கத் தீர்மானித்தோம் என்று பொதுஜன பெரமுன குறிப்பிடுவது நகைப்புக்குரியது. நிறைவேற்றுக்குழு கூட்டத்தின் போது இவற்றை நாங்கள் எடுத்துரைத்தோம்.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ வேட்பு மனுத் தாக்கல் செய்யாமல் தவறை திருத்திக் கொண்டால் பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் இணைவோம். தன்னிச்சையான முறையில் எடுத்த தீர்மானத்தால் கட்சி பிளவடைந்துள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# ஓட்டோ - கப் விபத்து; இருவர் உயிரிழந்தனர்!

நுவரெலியா, ஓக. 12


கப் ரக வாகனமும் முச்சக்கர வண்டியும் மோதிய விபத்தில் இருவர் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மஸ்கெலியா - நல்லதண்ணி பிரதான வீதியில் பிரவுன்லோ தோட்டப் பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம் பெற்றது.

மஸ்கெலியாவுக்கு பால் ஏற்றிச் சென்ற கெப் வாகனமும் முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து இடம் பெற்றது.

இதில், முச்சக்கரவண்டியில் பயணித்த இருவர் உயிரிழந்தனர். முச்சக்கரவண்டியின் சாரதி மற்றும் இன்னொருவர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள், மஸ்கெலியா பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ஐ)



# பொலிஸாருக்கான தேர்தல் வழிகாட்டி வெளியிடப்பட்டது

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

கொழும்பு, ஓக. 12

தேர்தல் காலத்தில் பொலிஸாருக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் பக்கச்சார்பானவையாகவோ அல்லது குறித்த ஒரு தரப்பினருக்கு சாதகமானவையாகவோ அமையக் கூடாது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமான - நியாயமான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்த பொலிஸார் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் - வழிகாட்டல்களை உள்ளடக்கி மனித உரிமைகள் ஆணைக்குழு வழிகாட்டி ஒன்றை வெளியிட்டுள்ளது. இதிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அரசமைப்பில் பொது மக்களின் வாக்களிப்பதற்கான உரிமை, அரசியல் செயற்பாடுகளில் சுதந்திரமாக ஈடுபடுவதற்கான உரிமை, சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலில் பங்கேற்பதற்கான உரிமை என்பன உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, தேர்தலை அண்மித்த காலப்பகுதியிலும், தேர்தல் நடைபெறும் தினத்தன்றும், தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியிலும் சகல பொலிஸ் அதிகாரிகளும் தேர்தல் வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்ற வேண்டும்.

பொலிஸாருக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் பக்கச்சார்பானவையாகவோ அல்லது குறித்தவொரு தரப்பினருக்கு சாதகமானவையாகவோ அமையக்கூடாது. இதேபோன்று அரசியல் காரணங்களால் அல்லது வேறு அழுத்தங்களால் இம்முறைப்பாடுகளை விசாரணையின்றிப் புறந்தள்ளுவது அரசமைப்பின் 12ஆவது சரத்தை மீறும் செயலாகும்.

இதேவேளை, வெறுப்புணர்வு பேச்சுக்கள் தொடர்பில் சட்டத்துக்கு அமைவாக பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும். தேர்தல் பிரசார நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சட்டங்களை எவ்வித பக்கச்சார்புமின்றி சகல வேட்பாளர்களுக்கும் ஒரேவிதமாக நடைமுறைப்படுத்தவேண்டும் - என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. (ஐ)

# தேர்தல்கள் ஆணைக்குழுவினரை தொடர்புபடுத்தி போலி விளம்பரம்

## சைபர் குற்றச்செயலாக இருக்கலாம் என எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 12

புதிய நிர்வாக ஊழியர்களை இணைத்துகொள்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு விண்ணப்பங்களை கோரியுள்ளதாக தெரிவித்து போலியான விளம்பரமொன்று பகிரப்படுவதாக இலங்கை கணினி அவசர பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தப் போலியான விளம்பரத்தை பகிர்வதனை தவிர்க்குமாறு அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

இதுவொரு சைபர் குற்றச் செயலாக இருக்கலாமெனவும் அதனூடாக உங்களின் தனிப்பட்ட தகவல்கள் வேறு நபர்களின் கைகளுக்கு செல்லும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலின் அழைப்...

இந்த நிலையில், பல்வேறுபட்ட பிரச்னைகளும் தமிழர் தரப்பாக கலந்துரையாட வேண்டி இருப்பதன் காரணமாகவும் அவர் தற்போதைய ஜனாதிபதி என்ற ரீதியிலும் அவருடன் கலந்துரையாட நாம் தீர்மானித்துள்ளோம்.

இந்தச் சந்திப்பின்போது, பயங்கரவாத தடைச் சட்ட விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற விடயங்களிலும் நாம் கரிசனை காட்டுவோம்- என்றார். (எ)

## எதிர்வரும் 15ஆம்...

அதிரடிப்படையினரின் உதவியும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராஜகிரியவில் உள்ள தேர்தல் அலுவலகத்தை அண்மித்த வீதிகளில் எதிர்வரும் 15ஆம் திகதி விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் வேட்பாளர்களுடன் வருகைதரும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளருடன் கட்சியின் செயலாளர் உட்பட இருவர் மாத்திரமே வேட்புமனு ஏற்கும் அலுவலகத்திற்குள் பிரவேசிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டார்.

அவர்களைத் தவிர மேலும் மூவர் தேர்தல் அலுவலக வளாகத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன. (அ)

## தமிழ் பொதுக்...

கட்சிகளின் 7 தலைவர்களும் பங்கேற்க மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்தச் சந்திப்பு எதிர்வரும் 15ஆம் திகதியே நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து தமிழ் தேசியப் பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ் மக்கள் பொதுச்சபை உறுப்பினர்கள் ஐவருக்கு தொலைபேசி அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த அழைப்பில் இன்று திங்கட்கிழமை காலை 5:00 மணிக்கு சந்திப்பு என்று கூறப்பட்டது. எதற்காக என்று அவர்கள் கேட்டபொழுது பதில் எதுவும் கூறப்படவில்லை.

இதனால் இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் பொதுச் சபையைச் சேர்ந்த பிரதிநிதிகள் 7 பேர்களும் பங்கேற்கமாட்டார்கள்.

தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களுக்கும் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து தொலைபேசி மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்று நடக்கும் சந்திப்பில், தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு என்ற அடிப்படையில் 14 உறுப்பினர்களும் சந்திப்பில் கலந்து கொள்ளமாட்டார்கள். தேர்தல் வேலைகளில் மூழ்கி இருப்பதால், குறுகிய கால அழைப்பின் அடிப்படையில் இன்றைய சந்திப்பில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாக கலந்து கொள்வது சிரமமாக இருக்கும். எதிர்காலத்தில் இது போன்ற அழைப்புகளை ஏற்று சந்திப்புகளில் கலந்துகொள்வது தொடர்பான முடிவை பொதுக் கட்டமைப்பு கூடி முடிவெடுக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்திப்பில் பேசப்பட வேண்டிய விடயங்கள் உள்ளிட்டவற்றுக்குத் தெளிவான காரணிகளுடன் ஜனாதிபதியிடம் இருந்து அழைப்பு கிடைத்தால், சந்திப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்று தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதி தேர்தலின் பின்னரே பொருட்கள் விநியோகிக்கலாம்

## சகல மாவட்ட செயலகங்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு உத்தரவு!

கொழும்பு, ஓக. 12

மாவட்ட செயலகங்களில் இருந்து பரவலாக்கப்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் பிரதேச செயலகங்களால் விநியோகிக்கப்படுவதாகவும், இதன் மூலம் குறித்த ஒரு கட்சியானது வாக்காளர்களை ஊக்குவிப்பதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாடுகளையடுத்து இவ்வாறான பொருட்களை தற்போது விநியோகிக்க வேண்டாம் என ஆணைக்குழு நுவரெலியா மாவட்ட செயலகம் உட்பட சகல மாவட்ட செயலகங்களுக்கும் உத்தரவிட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் ஒரு பிரதேச செயலகம் ஊடாக பல தோட்டப்பிரதேசங்களில் செயல்படும் அமைப்புகளுக்கு ஒலிபெருக்கிகள், பாத்திரங்கள், கூடாரங்கள் போன்றவற்றை விநியோகிக்கும் வண்ணம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் அறிவிப்பு செய்யப்பட்டிருந்ததாக நுவரெலியா மாவட்ட செயலக அதிகாரிகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன.

தாம் சொல்லும் வரை குறித்த பொருட்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டாம் என்றும் தாம் தேர்தல் பிரசார கூட்டங்களுக்கு தோட்டங்களுக்கு வரும் போது அவற்றை விநியோகிக்க வேண்டும் என்றும் தோட்டத் தலைவர்களுக்கு ஓர் அரசியல் கட்சி உத்தரவிட்டிருந்ததாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதனையடுத்து தேர்தல்கள் ஆணைக்குழுவானது பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு 09/08/2024 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் மேற்படி செயல்பாடுகளை நிறுத்தும்படி கடிதம் அனுப்பியுள்ளது.

இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாக குறித்த பொருட்களை விநியோகிக்குமாறு தமக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகங்கள் தெரிவித்துள்ளன. ஆனால், ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள இந்த வேளையில் இவ்வாறான பொருட்களை விநியோகிப்பது பொருத்தமானதல்ல என்றும் இது சில வேட்பாளர்களை ஊக்குவிக்கலாம், மற்றவர்களுக்கு பாதகமாக இருக்கலாம். எனவே, ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இந்தப் பொருட்களை விநியோகிக்குமாறு அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் பணிப்புரை விடுக்க விரும்புகின்றேன் என அந்த கடிதத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (எ)

## ஜனாதிபதி போட்டி...

மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவின் உறுப்பினரை வேட்பாளராகக் களமிறக்கக் கட்சி ஏகமனதாகத் தீர்மானித்ததாகக் குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற நிறைவேற்று சபை கூட்டத்தில் ஆளும் தரப்பின் 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே கலந்து கொண்டிருந்தனர்.

கட்சியின் ஆதரவாளர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளே பெரும்பான்மையாகக் கலந்து கொண்டிருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாகவே எமக்கு ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்த வாக்குறுதிக்குப் பின்னரே நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டோம். இருப்பினும் ஒரு தரப்பினரது தன்னிச்சையான செயற்பாடுகளினால் தவறான தீர்மானம் எடுக்கப்பட்டது.

கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களின் தீர்மானத்துக்கு எதிராகக் கட்சி செயற்படும் போது ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

கட்சி எடுத்த தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று மகிந்த ராஜபக்ஷவிடம் பலமுறை வலியுறுத்தினோம்.

தம்மிக்க பெரேரா இறுதி நேரத்தில் போட்டியிட முடியாது என்று குறிப்பிட்டார். ஆகவே நாமல் ராஜபக்ஷவை வேட்பாளராகக் களமிறக்கத் தீர்மானித்தோம் என்று பொதுஜன பெரமுன குறிப்பிடுவது நகைப்புக்குரியது. நிறைவேற்றுக் குழு கூட்டத்தின் போது இவற்றை நாங்கள் எடுத்துரைத்தோம்.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் வேட்புமனுத்தாக்கல் செய்யாமல் தவறை திருத்திக் கொண்டு ஜனாதிபதியுடன் மீண்டும் இணைவோம் என்றார்.

## பரமன்கிராய் பகுதி...

கிளிநொச்சி - பூநகரி பொலிஸ் பிரிவிற்குப்பட்ட மன்னார், நாவற்குழி செல்லும் ஏ-32 பிரதான வீதியில் பரமன் கிராய் பகுதியில் நேற்று காலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்து இடம் பெற்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும் விபத்திற்கான காரணம் தொடர்பாக பூநகரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சமல், சசீந்திர...

வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மகிந்த ராஜ பக்ஷ குடும்பத்த வர்கள் உட்பட ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் பலர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டுள்ளனர்.

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும், இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷவும் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதுடன் அவருக்கே கட்சி ஆதரவளிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மகிந்த ராஜபக்ஷவின் ஏனைய புதல்வர்களும் இதே நிலைப்பாட்டை கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின.

யோசித, ரோகித ஆகியோரின் சந்தைப்படுத்தல் நிறுவனத்தைச் சேர்ந்த குழுவிடம் ரணில் விக்கிரமசிங்கவின் பிரசாரத்தை முன்னெடுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் நாமல் ராஜபக்ஷ கட்சி தனது சொந்த வேட்பாளரை களமிறக்க வேண்டும் என்பதில் உறுதியாக காணப்படுகின்றார் எனக் கூறப்படுகின்றது. (அ)

## சமஷ்டி, நிர்ணய...

வவுனியாவில் இடம்பெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின் கருத்து வெளியிட்ட அதன் தலைவர் மாவை சேனாதிராசா இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் நேற்று கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம் தலைமையில் வவுனியா, குடியிருப்பில் அமைந்துள்ள கட்சியின் தாயகம் அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி தேர்தலில் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு, தமிழ் பொது வேட்பாளர் விடயம் மற்றும் தமிழரசுக் கட்சியின் தலைமை விடயம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் அதன் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், குகதாசன், சாணக்கியன் மற்றும் வட மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் உட்பட கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இது குறித்து மாவை சேனாதிராசா மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினரான அரியநேத்திரன் கட்சியுடன் உரையாடாமல் தன்னை தமிழ் பொது வேட்பாளராக அறிவித்தமை சம்பந்தமாக அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. ஆயினும் அந்தக் கருத்துக்களுக்கு இடமளிக்காமல் அரியநேத்திரனிடம் இப்போது விளக்கம் மட்டுமே கோருவது என முடிவு செய்யப்பட்டது. அத்துடன் தமிழ் பொது வேட்பாளர் குறித்து எந்தவித மான எதிர்க்கருத்துக்களையும் வெளியிடுவதில்லை என்றும் முடிவு செய்யப்பட்டது.

சமஷ்டி, சுய நிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வை ஆதரிக்கும் ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேச்சு நடத்துவதற்கு தயாராக உள்ளோம். இது தொடர்பிலும் நேற்று வலியுறுத்தப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசின் நிலைப்பாடு, மக்கள் யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்பன தொடர்பில் வேட்புமனு தாக்கலின் பின்னர் அறிக்கை ஒன்றை வெளியிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.-என்றார்.

## ஜனாதிபதித் தேர்...

அதன்படி, ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய சட்டம் மீறல் மற்றும் வன்முறை தொடர்பில் நேற்று 51 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டம் மீறல் தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 25 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 26 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. (அ)

## ராஜபக்ஷ குடும்ப...

கட்சியின் தீர்மானம் தான் காரணமாகும். கட்சி தேசத்தின் எதிர்காலத்தை மையப்படுத்தியே தீர்மானத்தை எடுத்தது. அந்த வகையில் தேசத்தின் எதிர்காலம் சம்பந்தமாக எனக்கும் பொறுப்புள்ளது. அந்த பொறுப்பின் அடிப்படையில் தான் நான் பொறுப்பேற்றுள்ளேன்.

இத்தருணத்தில் எமது குடும்பத்துக்குள் பிரச்னைகள் என்று பிரசாரம் செய்கின்றார்கள். அவற்றை நிராகரிக்கின்றேன். அதுமட்டுமன்றி அரசியல் ரீதியாக பலவீனம் அடைந்துள்ளவர்களின் செயற்பாடாகவே பார்க்கின்றேன்.

எதிர்வரும் நாட்களில் தேர்தல் பிரசாரப் பணிகள் ஆரம்பமாகவுள்ளன. அதன் போது ராஜபக்ஷக்களின் ஒற்றுமை மேடைகளின் ஊடாக வெளிப்படுத்தப்படும். எதிர்க்கட்சியினரின் பொய்யான பிரசாரம் அப்போது அம்பலமாகும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மதுபானங்கள் விலை குறைக்கப்படவில்லை

## வெளியான செய்திகள் பொய்

கொழும்பு, ஓக. 12

**மதுபானங்களின் விலை குறைக்கப்படும் என வெளியாகியுள்ள தகவல்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இதற்கமைய 750 மில்லி லீற்றர் மேலதிக மதுபான போத்தல் ஒன்றின் விலை 900 - 1000 ரூபாவினாலும் 175 மில்லி மீற்றர் போத்தலின் விலை 200 ரூபாவினாலும் குறைக்கப்படும் என செய்திகள் வெளியாகின.

அண்மையில் மதுவரி ஆணையாளருக்கும் மதுபான நிறுவனங்களுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மதுவுக்கு அதிகம் பயன்படுத்தப்படும் ஸ்பிரிட்களின் விலை குறைந்துள்ள நிலையில் மதுபானத்தின் விலையை குறைக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

மதுபோத்தல்களின் விலையில் 80 வீதம் மற்றும் 90 வீதம் பெறுமதி சேர் மற்றும் பிற வரிகளை உள்ளடக்கியுள்ளதாக மது நிறுவனங்கள் வலியுறுத்தின.

இதற்கமைய விசேட மதுபானத்தின் விலையை குறைக்குமாறு அண்மையில் விடுத்த கோரிக்கையை மதுபான உற்பத்தி நிறுவனங்கள் நிராகரித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூலை மாதம் முதலாம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தல் மதுபானங்களின் விலையை அதிகரித்தது.

விசேட மதுபான போத்தல் ஒன்றின் விலை 1000 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது. எதிர்காலத்தில் மது, பியர் ஆகியவற்றின் விலை கணிசமாக குறையும் எனக் கூறப்பட்டது.

இந்நிலையில் மதுபானங்களின் விலையில் எவ்வித குறைப்பும் ஏற்படாது என மதுவரி ஆணையாளர் எம்.ஜே.குணசிறி தெரிவித்தார்.

மது வரி குறைக்கப்பட்டால் மாத்திரமே மதுபானத்தின் விலையை குறைவடையும் சாத்தியம் காணப்படுவதாக அவர் மேலும் கூறினார். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக இம்தியாஸ்?

கொழும்பு, ஓக. 12

ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய தவிசாளராக பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நியமிக்கப்படவுள்ளார் என தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியை இராஜினாமா செய்வதாக அந்தக் கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா அறிவித்துள்ள நிலையில், புதிய தவிசாளர் தொடர்பான இந்த தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராகக் களமிறங்குவதற்குரிய கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ள நிலையிலேயே சரத் பொன்சேகா தவிசாளர் பதவியையும், ஐக்கிய மக்கள் சக்தியின் களனித் தொகுதி அமைப்பாளர் பதவியையும் துறந்துள்ளார். (அ)

# தேசிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனம் 26ஆம் திகதி



கொழும்பு, ஓக. 12

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி தேர்தலுக்கான விஞ்ஞாபனம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

இந்த தகவலை அக்கட்சியின் தலைவரான ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனமும் மாத இறுதிக்குள் முன்வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனமும் இறுதிப்படுத்தப்பட்டுவருகின்றது. (அ)

# ஆசிரியையின் பணப் பையை திருடி ஏ.ரி.எம் அட்டையில் பணம் கையாடல்

## சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது

கொழும்பு, ஓக. 12

ஆசிரியை ஒருவரின் பணப்பையை திருடி பணப்பையில் இருந்த ஏ.டி.எம். அட்டையை பயன்படுத்தி வங்கிக் கணக்கிலிருந்து 20 ஆயிரம் ரூபாய் பணத்தை எடுத்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக கிராதுருகோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

மஹாஓயா சிவில் பாதுகாப்பு படை முகாமில் பணிபுரியும் 41 வயதுடையவரே கைது செய்யப்பட்டுள்ளார். இவர் புதிய மெதகம, தியவிட்டகம பகுதியை சேர்ந்தவர் ஆவார்.

கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி ஹோபரிய பகுதியில் வசிக்கும் ஆசிரியர் ஒருவரின் ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளில் இருந்த பணப்பை திருடப்பட்டுள்ளதாக கிராதுருகோட்டை பொலிஸ் நிலையத்தில் அந்த ஆசிரியர் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டுக்கு அமைய, கிராதுருகோட்டை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இந்நிலையில், அப்பகுதியில் உள்ள சிசிரிவி காட்சிகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில் சந்தேக நபர் தெஹியத்தகண்டிய நகருக்கு மற்றுமொரு நபருடன் சென்று வங்கிக்கணக்கில் பணம் எடுத்துச் செல்லப்பட்டமை உறுதிபடுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மஹியங்கனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பொதுஜன ஐக்கிய முன்னணி ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

## புதனன்று புரிந்துணர்வு ஒப்பந்தம்

கொழும்பு, ஓக. 12

சுதந்திர கட்சியின் தலைமைத்துவத்திலான பொது ஜன ஐக்கிய மக்கள் முன்னணிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் நிமல் லான்சா தலைமையிலான புதிய அரசியல் கூட்டணிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை கைச்சாத்திடப்படவுள்ளது. இந்த கூட்டணியானது ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளது.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து வரக்கூடிய பாராளுமன்ற தேர்தலில் "பொதுஜன ஐக்கிய முன்னணி" கதிரை சின்னத்தில் போட்டியிடவுள்ளதுடன், வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க உள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவண்ண உறுதிப்படுத்தினார்.

மேலும், இந்த கூட்டணியில் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் இணைந்துகொள்ளவுள்ளன. இதனை மையப்படுத்தி கடந்த வெள்ளிக்கிழமை இரவு ரமாடா ஹோட்டலில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதில் முன்னாள் அமைச்சர் நசீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹூமான், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இஸ்மாயில் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர். (அ)

# சொத்து விவரங்களை இதுவரை வெளியிடாத 53 அரசியல்வாதிகள்!

கொழும்பு, ஓக. 12

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் 53 பேர் சொத்து விவரங்களை வெளியிடவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதி வரை தங்களது சொத்து விவரங்களை வெளியிடவில்லை என இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரையில் 116 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது சொத்து விவரங்களை வெளியிட்டுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்குள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது சொத்து விவரங்களை வெளியிட வேண்டும்.

இந்த சொத்து விவரங்கள் குறித்து இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்வது வழமையானது ஆகும்.

பாராளுமன்ற பணியாளர்கள், தேர்தல் ஆணைக்குழு பணியாளர்கள் மற்றும் பிரதமர் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோரும் சொத்து விவரங்களை வெளியிட்டுள்ளனர். (அ)

# ஒரு கோடிக்கு மேல் வாக்கு பெற்று சாதனை வெற்றியீட்டுவார் ரணில்!

## பாலித ரங்கே பண்டார நம்பிக்கை

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெறுவார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க சாதனை வெற்றியீட்டுவார் என அவர் கூறினார்.

அதிகளவான அரசியல் கட்சிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி ஏற்கனவே உறுதியாகியுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.